
15வது வருடத்தில்
# விளம்பரம்™
VLAMBARAM™
☎ 416-282-8059 📠 416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்

OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு
அருகாமையில்

வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome

நதி 15 | பாலம் 13 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JULY 01, 2005


வளைந்து போன வீர வாள்
03


தலித் படும் பாடு
09

தமிழின் வாழ்வே தமிழர் வாழ்வு
தமிழ் மொழி வாரம் 2005
26.06.2005 – 02.07.2005
தமிழ்நூல் கண்காட்சி உரையரங்கு தமிழிசை நாடகம் நாட்டியம்

# சந்திரிகாவின் அரசியல் வாழ்க்கை முடிவுக்கு வருகின்றது

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான ஒப்பந்தத்தை சந்திரிகா, புலிகளுடன் கைச்சாத்திட்டதைத் தொடர்ந்து, இலங்கையில் அரசியல் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இலங்கைப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை இழந்து விட்ட சந்திரிகா அரசு எத்தனை நாட்களுக்கு நீடிக்கும் என்பதை நாள் கணக்கிலேயே எண்ண வேண்டும். இதே சமயம் தனது ஜனாதிபதி அதிகாரத்தை பாவித்து சந்திரிகாவினால் இன்னமும் நான்கு மாதம் அளவில் மட்டுமே தாக்குப் பிடிக்க முடியும் என்றும் தெரியவந்துள்ளது.

புலிகளுடன் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான ஒரு ஒப்பந்தத்தை செய்து கொள்ளக் கூடாது என்று ஏற்கனவே அரசில் இருந்து விலகிய ஜேவிபி, தனது மிக மோசமான இனவாத பிரச்சாரங்களை சிங்கள மக்கள் மத்தியில் முன்னெடுக்கின்றது. அடுத்த தேர்தலில் இந்த இனவாத பிரச்சாரத்தையே ஜேவிபி தனது பிரதான ஆயுதமாக நம்பியுள்ளது.

இதே நேரம், முஸ்லீம் அரசியல் கட்சிகளும் இதுதான் தருணம் என்று காத்திருந்ததைப் போல திடீரென, முஸ்லீம் மக்களுக்குரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை என்று, சந்திரிகாவின் மேல் பழி போட்டு அரசாங்கத்துடன் முரண்படத் தொடங்கியதோடு, முஸ்லீம் மக்கள் மத்தியில் இனவாத அரசியலை முன்வைக்கத் தொடங்கியுள்ளனர். அடுத்த தேர்தலுக்கு இதுதான் இவர்களுடை துருப்புச் சீட்டு.

இவையெல்லாம் ஒரு புறம் இருக்க இதுவரை தான் மட்டுமே தமிழ் மக்களின் பிரச்சினைகளை சமாதான ரீதியாகத் தீர்ப்பதற்கு முயன்று வந்ததாகவும், சந்திரிகாவுக்கு இவ்விடயத்தில் போதிய அக்கறை இல்லை என்றும், உடன் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில்

தொடர்ச்சி 17ம் பக்கம்

# கனடா தின வாழ்த்துக்கள்



இன்று கனடா தினம். கனடாவில் வாழும் அனைத்து மக்களும், எல்லா மாநிலங்களும் ஒன்றிணைந்து, குதூகலித்துக் கொண்டாடும் இத் தினத்தில் விளம்பரம் தனது வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவிக்கின்றது.


யூலை முதலாம் திகதி, கனடாதின விடுமுறை தினம் என்று 1879ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அப்போது அந்த தினம் டொமினியன் தினம் (Dominion Day) என்று அழைக்கப்பட்டது. 1982ம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 27ம் திகதி இந்த டொமினியன் தினம், கனடா தினம் என்று உத்தியோக பூர்வமாக மாற்றம் அடைந்தது. 1985ல் இருந்து கனடா தினம் எல்லா மாநிலங்களிலும். ரெரிடோரிகளிலும் ஒழுங்கு செய்யப் பட்டு கொண்டாடப்படுகின்றது.


கனடா தினத்தை ஒட்டி வருடாந்தம், ஒரு Poster challenge போட்டி நடத்தப்படுகின்றது. பதினெட்டு வயதுக்கு குறைந் தவர்கள் இதில் கலந்து கொண்டு தமது ஓவியங்களை அனுப்பி வைக்கலாம். கனட-ாவில் உள்ள பதின் மூன்று மாநிலங்கள் மற்றும் ரெரிடோரிகளில் வெற்றி பெற்றவர்கள் கனடாதினம் அன்று ஒட்டோவாவுக்கு அழைக்கப்படுவார்கள்.


தேசிய அளவில் முதலாவதாக வெற்றி பெற்றவரும், அவருடைய பெற்றோர்கள், அல்லது பாதுகாவலர்கள் ஜப்பானுக்கு அனுப்பப்படுகின்றனர். இந்த ஆண்டு இந்த பரிசைப் பெற்றவர் சஸ்கச்சுவான் மாநிலத்தை சேர்ந்த பதின்நான்கு வயது Jennifer Truong என்ற சிறுமி ஆகும். விளம்பரம் வாசகர்களே அடுத்த ஆண்டு உங்கள் குழந்தைகளையும் இந்த போட்டியில் கலந்து கொள்ளச் செய்து வெற்றி பெறுங்கள். 1987ம் ஆண்டு முதல் இந்த போட்டி நடாத்தப்படுகின்றது. இந்த போட்டி தொடர்பான விபரங்களுக்கு http://www.pch.gc.ca/special/affiche-poster/rules_e.cfmக்கு சென்று விபரங்களை அறிந்து கொள்ளலாம்.


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"

HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416•817•8479
Bus: 416•321•6969
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER


Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
• Auto • Home • R.R.S.P • Life
• Disability • Mutual Fund • Group Insurance • Child Education
• Travel & Business

416.321.1515 • 905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி

DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

# உங்கள் வியாபார வெற்றிக்கு இணையத்தளம் தேவையா?

## பகுதி - 05

இணையத்தளத்தில் முக்கிய சொற்களின் (Keywords) முக்கியத்துவம், மற்றும் இணையதளப் பக்கங்களை தேடுதல் இயந்திரத்துக்குச் சமர்ப்பித்தல் பற்றி சென்ற விளம்பரத்தில் பார்த்தோம். அதன் தொடர்ச்சியை இப்போது காண்போம். இணையத்தள நிர்வகித்தலில் ஒன்பது செயற்பாடுகளை வெற்றிக்கு வழிகாட்டியாகக் கூறுகிறார்கள். அவை முறையே

1. முக்கிய சொற்களை ஆராய்தல்.
2. மிகுந்த பயன்பெற, தகுந்த முக்கியச் சொற்களைத் தேர்ந்தெடுத்து இணையதளத்தில் பயன்படுத்துதல்.
3. இணையத்தள பக்கங்களை தேடுதல் இயந்திரத்துக்கு (Search engine) ஏற்றவாறு மாற்றி அமைத்தல்.
4. இணையத்தள பக்கங்களைத் தேடுதல் இயந்திரத்துக்குச் சமர்ப்பித்தல்.
5. தேடுதல் இயந்திரத்தில் உங்கள் இணையத்தளம் எத்தகைய இடத்தைப் பெறுகின்றது என்று பார்த்தல்.
6. உங்கள் போட்டியாளர்களின் இணையத் தளத்தை விட உங்கள் இணையதளம் எவ்வளவு பிரபல்யமாக உள்ளது அல்லது பிரபல்யம் இல்லாமல் இருக்கின்றது என்று தெரிந்து கொள்ளுதல்.
7. உங்கள் இணையதளத்தின் தரத்தைப் பாதுகாத்தலும் மேம்படுத்தலும்.
8. உங்கள் இணையதளம் 24 மணி நேரமும் உபயோகிப்பவர்களுக்குக் கிடைக்கின்றதா என்று கண்காணித்தல்.
9. உங்கள் இணையதளத்துக்கு வருகை தருவோரின் எண்ணிக்கையையும், வியாபார வளர்ச்சிக்கு அத்தகையோரின் பங்கையும் தொடர்ந்து கவனித்து வருதல்.

இவற்றின் விரிவை இப்போது காண்போம்.

உங்கள் இணையதளம் உங்கள் வியாபாரத்துக்குப் பயன்தர வேண்டுமானால், அதன் தரத்தையும், அதற்கு வருகை தருவோரையும் நீங்கள் தொடர்ந்து கண்காணித்தல் இன்றியமையததாகின்றது. இதைக் குறிப்பாக மூன்று சொற்களில் குறிக்கலாம். உங்கள் இணையதளத்தை

**செய்யும் தொழிலில் வெற்றி பெற**

- முன்னேற்றுங்கள். (Promote)
- பராமரியுங்கள். (Maintain)
- ஆராயுங்கள். (Analyze)

முன்னேற்றுவதற்கான வழிமுறைகள்,

- முக்கியச் சொற்களை ஆராய்தல்.
- மிகுந்த பயன்பெற ஆலோசனை பெறல்.
- இணையத்தள பக்கங்களைத் திருத்தி அமைத்தல்.
- தேடுதல் இயந்திரங்களுக்குச் சமர்ப்பித்தல்.
- உங்கள் வரிசை எண்ணைச் (ranking) சோதித்தல்
- உங்கள் இணையத்தளத்தின் பிரபல்யத்தை ஆராய்தல்.

**இணையத்தள பராமரிப்புக்கான வழிமுறைகள்.**

- இணையத்தளத்தின் தரத்தில் கண்ணும் கருத்துமாயிருத்தல்.
- தகுந்த மாற்றங்களை இணையத்தளத்தில் அவ்வப் போது செய்தல்.
- எவ்வளவு விரைவில் அல்லது தாமதமாக உங்கள் இணையத்தளம், பெயரைப் பதிவு செய்தவுடன் பார்வைக்கு வருகின்றது என்று கண்காணித்தல்.

படங்கள் அதிகம் இருந்தால் இணையத்தளம் பார்வைக்கு வர நேரம் அதிகம் எடுத்துக் கொள்ளும். பார்வையாளருக்கோ பொறுமை இருக்காது. உங்கள் பக்கத்தை ஒதுக்கி விட்டு, வேறு இணையதளத்துக்குச் செல்லக்கூடிய அபாயம் உள்ளது. ஆராய்தலுக்கான வழிமுறை முக்கியமாக ஒன்றே ஒன்றுதான்.

வருகை தருவோர் பற்றிய பட்டியல்களையும் மற்ற விபரங்களையும் (Traffic reports) பெற்று ஆராய்தலே ஆகும். உங்களுடைய முயற்சிகள் எல்லாம் தேடுதல் இயந்திரத்தில் முதல் பத்துக்குள் உங்கள் இணையத்தளத்தைக் கொண்டுவரச் செய்வதாகவே இருக்கவேண்டும்.

முதல் பத்துக்குள் இருக்கும் மற்ற போட்டியாளர்களின் இணையதளங்களையும் கவனத்துடன் பார்த்துத் தகுந்த மாற்றங்களை உங்கள் இணையத்தளத்தில் நீங்கள் செய்ய வேண்டும்.

தேடுதல் இயந்திரங்களுக்கு இணையத் தளங்களைச் சமர்ப்பிப்பது பற்றி இரண்டுவிதமான கருத்துக்கள் நிலவுகின்றன.

(1) நமக்கேற்ற பார்வையாளர்களைத் தேடுதல் இயந்திரங்கள் பெற்றுத் தரும்.
(2) தேடுதல் இயந்திரங்களுக்கு இணையதளப் பக்கங்களைச் சமர்ப்பித்தல், காலவிரயமும், பொருள்விரயமுமே ஆகும். பெரிய பயன் ஒன்றும் விளையாது.

நடைமுறையில் இந்த இரண்டு கருத்துக்களுமே உண்மையாக இருக்கக் காண்கின்றோம். சீரியமுறையில் ஒழுங்காகப் பாடுபட்டு இணையத்தளத்தை முன்னேற்றினால் முதல் கருத்து உண்மையாகக் கூடும். இல்லையேல் பிந்தைய கருத்து உண்மையாகக் கூடும்.

**பெரி. முத்துராமன்**

தேடுதல் இயந்திரத்தில் உங்கள் இணையத்தளத்தை முன்னேற்றிய பிறகு, வரும் வாடிக்கையாளர்களின் கண்களிலும் முன்னேற்ற முயற்சிக்க வேண்டும்.

- பிழைகள்.
- விட்டுப் போகும் தொடர்புகள். (Broken links).
- தலைப்பிடப்படாத பக்கங்கள்.
- இடைஇடையே தொடர்பு கிடைக்காத இணையதளங்கள் போன்றவை வருகையாளரை எரிச்சல் அடையச் செய்யும். இத்தகைய தவறுகள் நேராதவாறு எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

இத்தகைய தவறுகள் உங்கள் இணையத்தளத்தில் இருக்குமானால் மூன்றில் ஒரு வருகையாளரை உங்கள் இணையத் தளம் இழக்கக் கூடும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இணையத்தளம் சினிமாவைப்போல ஒரு சக்தி வாய்ந்த ஊடகம். சினிமாவைப் பயன்படுத்தி நாடாண்டவர்களும் உண்டு. வீடு, மனை, தோட்டம் என்று எல்லாவற்றையும் இழந்தவர்களும் உண்டு. அதே போல இணையத்தளத்தைப் பயன்படுத்தி வியாபாரத்தை முன்னேற்றியவர்களும் உண்டு. பொருளை இழந்தவர்களும் உண்டு.



வேறென்ன, மேலும் இணையத்தளம் பற்றிய விபரங்களை அடுத்த விளம்பரத்தில் பார்ப்போம்.

---

# வளைந்து போன வீர வாள்

03ஆம் பக்கத் தொடர்ச்சி

சற்றும் எதிர்பாராமல் அம்மாவே ஒரு திட்டம் போட்டுக் கொடுத்தாள். டேய் நீங்கள் இரண்டு பேரும் மாமா போகிற போது அவரோடையே போய், வரும் போது ரேடியோவையும் எடுத்துக் கொண்டு, மாமா வாங்கித் தாற அரிசியையும் கொண்டு வாங்கோவன்டா.

மாமாவுக்கும் இந்தத் திடீர்த் திட்டம் பிடித்துக் கொண்டது ஏன் என்று பிறகு தான் எனக்கும் தம்பிக்கும் தெரிய வந்தது. அவர் சில மூட்டைகளை அநுராதபுரத்திற்கு கடத்தல் செய்ய என்னையும் தம்பியையும் நம்பி முழு ஏற்பாடுகளையும் செய்து முடித்தார்.

புது வருடம் முடிந்ததும் மாமாவின் விடுமுறையும் முடிவுக்கு வந்து விட்டது.

வெங்காயம், செத்தல் மிளகாய், பாணிபோட்ட போயிலை சகிதம் இணுவில் ஸ்டேசனுக்குச் சென்று ரெயின் எடுப்பதற்காக நாங்கள் வெளிக்கிட்டோம்.

வேலிக்குப் பின்னால நின்று சர சர என்று சத்தம். பெரியம்மா அவசரமாய் ஆனால் பதுங்கிப் பதுங்கி வந்தாள்.

பெரியம்மா முன் வாசல் வழியால் எங்கட வீட்டுக்கு வந்ததை ஒரு நாளும் நான் கண்டதேயில்லை. எப்பவும் அவள் பொழுது விழுந்ததுக்கும் பிறகு: வேலியைப் பொத்துக் கொண்டு, கிணத்தடிப் பக்கமாய் நின்று, திடீரென்று ஒரு மரத்துக்குப் பின்னாலை அல்லது ஆட்டுக் கொட்டிலுக்குள் பதுங்கி இருந்து அதிரடியாய் வந்து தரிசனம் தருவாள். அவளுக்கு என்ன பாதுகாப்புப் பிரச்சனை என்று கரிசனையாய் கேட்டறிய யாருமே யோசித்ததில்லை.

கையில் கட்டுக் கிளுவம் இலையோட வந்த பெரியம்மா தம்பியின்ட காதுக்குள்ளை சொன்னாள் ஆளுக்கொரு மூட்டையோடை வந்திடுங்கோடா.

அநுராதபுரம் ஸ்டேசனில இறங்கி மாமாவின் குவாட்டசுக்கு போவதற்கான பஸ்சில் ஏறும் வரை பட்டவேதனைகளை சொல்ல முடியாது. என் தம்பிக்கு கை வீங்கியே விட்டது. இரகசியமாய் அழுதிருப்பான் போலவும் தோன்றியது.

குவாட்டசுக்கு அருகிலேயே பஸ் நின்றது. இறங்கியதுமே மாமாவை எதிர்பார்த்துக் காத்திருந்தது போல லொக்கு பண்டா எங்களடிக்கு வந்து விட்டான். அவன் தான் அந்தக் குவாட்டசுக்கு காவல்காரன். இவனுக்கு காவலுக்கு இரண்டுபேரைப் போட வேண்டும் போல எனக்கிருந்தது.

ஐயா என்று சிங்களத்தில் பணிவாக அழைத்தவன் தன்னுடைய புத்தாண்டு வாழ்த்துக்களை மாமாவுக்கு தெரிவித்தான். மாமாவும் பதிலுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

லொக்கு பண்டா எங்களை ஆச்சரியமாகப் பார்த்தான். எங்களை மாமா சிங்களத்தில் அறிமுகம் செய்து வைத்தார்.

ஓ.. என்று இழுத்தவன் ஸ்கூல் எல்லாம் லீவு தானே இப்ப என்று தமிழில் எங்களைப்பார்த்துக் கூறினான்.

மூட்டைகளை வெகு அனாயாசமாகத் தூக்கிக் கொண்டு வந்து இறக்கி வைத்தான். மாமாவின் இருப்பிடம் எனக்கு மிக்க அசௌகரியமாக இருந்தது.

எங்களுடைய ஆட்டுக் கொட்டில் இதைவிடப் பெரிசு தம்பி குசு குசுத்தான். அவனுடைய காலில் நான் ஒரு மிதிமிதிக்க அமைதியாகி விட்டான்.

லொக்கு பண்டா காலையில் வருவதாகக் கூறி புறப்படும் போது பெரிய மாத்தையா வந்து விட்டாரா? என்று மாமா கேட்டார்.

மாலையிலேயே வந்து விட்டார் என்று கூறியபடி இருட்டுக்குள் போய் மறைந்துவிட்டான்.

மாமா ரேடியோ எங்கே?

லொக்கு பண்டா போனதுமே ஆவலாய் கேட்டேன். அதை ஒரு தடவையாவது பார்த்துவிட்டால் பட்ட கஸ்டங்கள் நீங்கி விடும் போல இருந்தது.

இப்ப படுங்கோடா. அதையெல்லாம் காலையில பார்க்கலாம் என்று கடுமையாகக் கூறினார். ஒரே ஒரு மரக்கட்டில் இருந்த அந்த இடத்தில் எப்படி படுப்பது என்று தீவிரமாகத் தம்பி யோசித்தான். மாஜிசியன் சர்க்காரைப் போல மாமா ஒரு இடத்தில் கைவைத்து இரண்டு சாக்குகளை எடுத்து தந்தார்.

தொடர்ச்சி 12ம் பக்கம்


SAMI DAYCARE



* மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
* ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
* காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை * மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை * சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $75.00

Summer Daycare - $60 with food & Everything

**தினசரி நடவடிக்கைகள்** * உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா.

#7 Birchcrest Court (Finch / Warden) Mrs.S.J. சௌந்தரநாயகம் 416-502-3033



விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



HOME INSPECTION

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

**ந. தயாபரன்**

Certified Inspection Specialist

Expert Building Inspections LTD.

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# வளைந்து போன வீர வாள்

மார்கழி மாத விடுமுறை விடவும் மாமா வந்து இறங்கவும் சரியாக இருந்தது. மார்கழி மாத விடுமுறையில் பெரிய பெரிய வசதிகள் எல்லாம் இருக்கின்றது. முப்பது நாட்களுக்கும் குறையாமல் வருகின்ற மிகப் பெரிய பள்ளிக்கூட விடுமுறை இது என்பதால் பள்ளிக்கூடம் போகாதவர்களுக்கும் கூட முக்கியத்துவம் வாய்ந்த விடுமுறை இது.

இறுதிப் பரீட்சை முடிந்ததன் பின்னர் வருவதால் "புத்தகத்தை எடுத்துப் படியடா, என்கின்ற வன்முறைகள் எதுவுமே கிடையாது. அண்டை நாட்டுக்கு எதிரான பெரும் படையெடுப்புக்குத் தயாராவது போல, அடுத்த கட்டப் பயிர்ச்செய்கைக்காக ஒட்டு மொத்த யாழ்ப்பாணமும் தயாராகின்ற காலகட்டம் என்பதால் மிளகாய்ப் பழம் பிடுங்க வாடா, கத்தரிக்காயை கழுவிச் சாக்கில் கட்டு என்கின்ற சிறுவர்கள் மீதான கொடுமைகளும் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுவிடும்.

தம்பியின் கொப்பிப்பேப்பரை கிழித்து விதம் விதமாகக் கப்பல் செய்து விடுவது, முழங்காலை நனைத்துக் கொண்டு நின்று, தெருவில் ஓடி வருகின்ற வெள்ளத்தை கரிகாலன் பாணியில் அணை கட்டி வெடிவாணரின் வளவுக்குள்ளை விடுகின்றது போன்ற வித்தைகளைக் கற்றிருந்தால் இந்த மார்கழி மழை கூட ஒரு பெரிய பிரச்சனை கிடையாது.

ஒட்டுமொத்தமாகக் கூறுவது என்றால் இடை இடையே வந்து போகின்ற பேச்சுவார்த்தைக் காலகட்ட குதூகலம் போல மார்கழி விடுமுறை இருக்கும். இதிலே வசதி என்னவென்றால் இந்த கண்காணிப்புக் குழு போன்ற பிரச்சனை ஒன்றுமே கிடையவே கிடையாது.

வழமைபோல ஒரு பழைய சூட்கேசுடன் மாமா வந்து இறங்கினார். அதற்கு இரண்டு பூட்டு போட்டுப் பூட்டி வைத்திருப்பார். சூட்கேசுக்குள் முகச்சவரம் செய்வதற்கான சவர அலகு, சின்னக் கண்ணாடி மற்றும் தட்டுமுட்டுச் சாமான்களுடன் ஒரு கால்சட்டையும் இரண்டு மூன்று சட்டைகளுடன் ஒரு கிழிந்த பெனியனும் இருக்கும். நிச்சயமாக சாரம் மற்றும் துவாய் வைத்திருக்க மாட்டார். இரண்டு நாளைக்கு ஒரு தடைவை நாங்கள் தான் அவற்றை அவருக்கு சப்ளை செய்ய வேண்டும்.

இந்த சமாச்சாரங்களுக்கும் அப்பால் ஒரு புத்தம் புதிய கத்தி அல்லது புது மண்வெட்டி, வாள் அல்லதும் போனால் கூர்மையான ஒரு கோடாலி நிச்சயமாய் சூட்கேசுக்குள் வைத்திருப்பார். பழைய சிங்களப் பேப்பர் ஒன்றில் மிகக் கவன-மாகச் சுற்றப்பட்டு, அடிப் பெட்டிக்குள் இது பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும். யாராவது இதைப் பார்த்தால் மாமா ஏதோ பெரிய சண்டியர் என்று நிச்சயமாக நம்புவார்கள்.

பதினாறு வயதில் அப்புவிடம் அடிவாங்கிக் கொண்டு வீட்டை விட்டு ஓடிப்போனவர்தான் இந்த மாமா. முற்றத்துக் கொடியில் காய்ந்து கொண்டிருந்த அப்புவின் கோமணத்தில் முடிந்திருந்த இருபது ரூபாயைக் களவெடுத்துக் கொண்டு ஓடிப் போய்ட்டான்- ஆச்சி அலுக்காமல் அடிக்கடி இதைச் சொல்லுவா.

டிக்கட்டும் எடுக்காமல் இரயில் ஏறிப் போனவர் சிங்களம், இங்கிலீஸ் எல்லாம் அளவாகப் படித்து இன்றைக்குப் பெரிய ஒரு அரசாங்க உத்தியோகத்தர். இப்போ அநுராதபுரத்தில் இருந்து இருபது மைல் தூரத்தில் இருக்கின்ற ஒரு சிங்களப் பகுதியில் பெரும் தெருக்கள் திணைக்களத்தில் ஸ்ரோர் கீப்பராக வேலை செய்கிறார்.

அடிக்கடி வேலை காரண நிமிர்த்தம் அவருக்கு இட மாற்றங்கள் கிடைக்கும். விடுமுறைக்கு வந்து போகிறபோது தவறாமல் புதுக் கத்தி, கரண்டி, கோடரி என்று விதம் விதமாய்க் கொண்டு வந்து அம்மா, பெரியம்மா, சின்னம்மாவுக்கு கொடுத்து, பதிலாக உடைந்து முறிந்த பழைய சாமான்களை அள்ளிக் கொண்டு போய் கணக்குக் காட்டுவதில் ஆள் ஒரு பெரிய கிள்ளாடி. அவருடைய இந்த சேவைக்காக யாழ்ப்பாணம் வரும் போதெல்லாம் மேலதிக உபசரிப்புகள் எப்போதும் அவருக்கு உண்டு.

இது மட்டுமல்லாது தடியன், எருமையன், குத்தியன் என்று அப்பா, பெரியப்பா மற்றும் சின்னய்யாவை, அவர்கள் இல்லாத சமயமாகப் பார்த்து மாமா திட்டுவதைப்பற்றி மூன்று பெண்களும் கண்டு கொள்வதும் இல்லை.

## செழியன்

மாமா வந்தால் எங்களுடைய வீட்டில் தான் தங்குவார். அந்த இரண்டு மூன்று கிழமைக்குள் மாமா நடத்துகின்ற தர்ப்பாரில் அம்மா மனம் கிழிந்து, இட்டிலி அவிக்கின்ற துணிபோல நொய்ந்து போய்விடுவாள்.

இவருக்குத் தான் ஏதோ ஒரு பெரிய குறு நில மன்னன் என்ற நினைப்பு. ஆத்திரத்தில் அம்மா ஒரு தடைவை வாய் விட்டுக் கூறினாலும் இது மாமாவுக்கு கேட்டு விட்டதோ என்று பயந்து போனாள்.

நல்ல வேளை அது எனக்கு மட்டும் தான் கேட்டது. ஆனால் எனக்கு மாமாவைப் பார்க்கின்ற போதெல்லாம் குறுநில மன்னனைப் போலத் தோன்றியதே இல்லை. கல்கியின் தொடர் கதையில் வருகின்ற வீர பாண்டியனின் நினைவுதான் வரும். வீரவாளை இழந்து விட்ட பின்னரும் கம்பீரமாகக் குரல் எழுப்பிப் பாட்டுப் பாடிக் கொண்டு திரிகின்ற சுந்தர பாண்டியன்.

கல்கியின் கதையில் ஒரு வசதி இருக்கிறது. அரசன் பிடிபட்டாலோ அல்லது கொல்லப்பட்டாலும் பிரச்சினை முடிந்து போவதில்லை. இந்த மணிமுடியையும், வீரவாளையும் மட்டும் எங்காவது ஒளித்து வைத்துவிட்டால் போதும். பிறகு சமயம் பார்த்து அந்த வீரவாளையும், முடியையும் யாராவது தூக்கிக் கொண்டு மறுபடி ஆட்சியைப் பிடித்துவிடலாம். நல்லகாலம் இந்த வசதி இப்பபோது கிடையாது. இருந்தால் யாருடைய துப்பாக்கியை யார் எடுத்துக் கொண்டு வந்து நிற்பார்கள் என்று சொல்ல முடியாது.

மாமா வீரவாளை வெகு பவுத்திரமாக எங்கோ ஒளித்து வைத்திருப்பதாகவே எனக்குத் தோன்றும். எங்களுக்கும் இந்த மாமாவினால் பெரிய ஆக்கினை. ஏதோ ஆபத்து சமயத்துக்கென்று தயாராக வைத்திருப்பதைப் போல அவர் வைத்திருக்கும் ஒரே பெனியனையும் ஜட்டியையும் நானும் தம்பியும் தோய்த்துக் கொடுக்கவேண்டும். கை படாமல் அதைத் தோய்த்து எடுத்து அலசிக் காயப்போடுவது NASA வின் புது முயற்சி போன்ற ஒரு அபூர்வமான வேலை.

இதை விட அவருடைய சாப்பாட்டுக் கோப்பை, தேத்தண்ணிக் கோப்பைகளைக் கழுவுவது, கடைக்குப் போய் அவர் சொல்லுற சாமான்கள் வாங்கிக் கொண்டு வருவது, சைக்கிளின் பின்னால் அவர் இருக்க, வேர்வை வழிய வழிய சைக்கிள் மிதிப்பது, வழியில் திடீரெனச் சைக்கிளை விட்டுக் குதித்து யாருடனாவது வம்பளக்கும் போது மிகப் பொறுமையாக காத்திருப்பது என்று பல விதமான வேலைகளும் எமக்கு இருக்கும். எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு விடுவோம். மாமா கடைசியாய் யாழ்ப்பாணம் கூட்டிக் கொண்டு போய்க் காட்டுகின்ற படத்துக்குக்காகவும், மலாயன் கடை வடை, தேத்தண்ணிக்காகவும் இன்னும் எத்தனை வந்தாலும் தாங்கிக் கொள்ளலாம்.

மாமாவுக்கு ஏன் மாமி இல்லை என்று மிக நீண்ட காலமாக எனக்குள் குடைந்து கொண்டிருந்த கேள்வியை ஒரு நாள் பொறுக்க முடியாமல் அம்மாவிடம் கேட்டு விட்டேன்.

ஒரு தடைவ என்னை முறைத்துப் பார்த்தாள். உனக்கு என்னத்துக்கடா? என்று முறுகல் முறுகி விட்டு மாமி செத்துப் போய்விட்டார் என்று அம்மா சொல்லியதை நான் நம்பவில்லை.

அம்மாவும் பெரியம்மாவும் குசு குசுக்கின்ற போது மிகத் தந்திரமாக ஒட்டுக் கதை கேட்டுத் தம்பி தான் விசயத்தை ஒரு நாள் கூறினான். ஒட்டுக் கதைகள் கேட்டு ஆளுக்கு ஆள் பிரச்சனைகள் உண்டு பண்ணுவது, இவனுக்கு கில்லி விளையாட்டுப் போல ஒரு விளையாட்டு.

இவனைப் பார்த்தால் ஒட்டுக் கதை கேட்கின்றான் என்று யாருமே நம்ப மாட்டார்கள். அயன்ஸ்டீனின் ஏதோ ஒரு கொள்கையை எடுத்து பரீட்சித்துப் பார்ப்பதைப் போல பரபரப்பாக ஏதோ செய்து கொண்டிருப்பான். கைகள் கிறு கிறுவென வேகமாக வேலை செய்யும். நெற்றியையும் கண்களையும் அடிக்கடி சுருக்கியும் விரித்தும் தன்னுடைய மூளை அந்த இடத்தில் இல்லை என்று காட்டிக் கொள்வான், சில சமயம் தன்னுடைய பாட்டில் ஏதோ புலம்புவான். காதுகளை மட்டும் தன்னுடைய இந்த வேலைகளோடு எதுவும் சம்பந்தம் இல்லாமல் தள்ளி வைத்துக் கொள்வான். அதை எத்தனை பாகையில் சரியாக சரித்து வைத்துக் கொள்வது என்பது அவனுக்கு மட்டும் தெரிந்த கலை.

மாமி எப்பவோ ஓடிப்போய்டா.

எனக்குக் கண்ணீர் வந்தது. பாவம் மாமி எவ்வளவு பொறுமையாய் இருந்திருப்பாள். மூவேந்தர்களுக்குள் இருந்திருக்கக் கூடிய அறிவு குறைந்த ஒரு மூட வேந்தனைப் போல் மாமா போட்ட மிக மட்டமான அட்டகாசங்களை எல்லாம் பொறுத்துக் கொண்ட வாயில்லாப் பூச்சி.

அடிக்கடி மாமி கிணற்றுக் கட்டில் குந்தி இருந்து கண் கலங்குகின்ற காட்சி எனக்குள் வந்தது. அவள் கண்ணீர் கலந்த தண்ணீரைத்தான் சூழ இருந்த இந்த எல்லாக் குடும்பங்களும் குடித்திருக்கும். ஆனால் மாமியின் மீது எந்த ஒரு கருணையும் காட்ட மறுக்கின்றது.

மாமி ஓடிப் போயிருக்க மாட்டா, மாமா தான் துரத்தி விட்டிருப்பார். நான் இப்படிச் சொன்னதையும் கேட்டு வைத்துக் கொண்டான் தம்பி. நேராக பெரியம்மா வீட்டுக்குப் போனான். போனவன் சின்னக்காவிடம் போட்டுக் கொடுத்து நல்ல பிள்ளை என்ற பட்டத்தை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொண்டான்.

தெருவில போன ஓணானை மடியில பிடிச்சுக் கட்டிவைச்ச மாதிரித்தான் என்னுடைய தம்பி. ஒரு மாதிரியான நிலையில் தான் தம்பியுடனான எனது வாழ்க்கை போய்கொண்டிருந்தது. அடிக்கடி என் காலை வாரிவிட்டு விடுவான்.

வர வர உன்னுடைய பழக்கங்கள் சரியில்லை. ஒரு இத்துளியாய் இருந்து கொண்டு பெரிய விசயங்களுக்கை தேவையில்லாமல் மூக்கை நுளைக்கின்றாய்.குஞ்சையப்பாட்டை சொல்லட்டே சின்னக்கா மிரட்டினாள். அவள் லேசில சொல்லமாட்டாள். சொன்னால் அவள் தாற கடிதங்களைக் குடுக்க இனி வேற ஆளத்தான் அவள் பார்க்க வேண்டும்.



மாமியால் தாங்க முடியாத மாமாவின் அட்டூழியங்களை எல்லாம் என்னுடைய அம்மா என்ன வென்று தலைக்கு மேல் தாங்குகிறாள் என்பது எனக்கு அதிசயமாய் இல்லாவிட்டாலும், அது அற்புதங்களில் ஒன்றாகவாவது இருக்கக் கூடியது என்று தோன்றியது.

ஒட்டுக் கதை மன்னன் இதையும் கண்டு பிடித்துச் சொல்லி விட்டான். எங்களுடைய புது வீட்டைக் கட்டி முடிக்க வட்டியே இல்லாமல் இருபது ஆயிரம் ரூபாய் மாமா கொடுத்த கதை தெரிந்த பின்னர், அம்மா மிகவும் நியாயமாய் நடப்பதாகவே எனக்குத் தோன்றியது. நீதி நிய-ாயங்கள் தெரிந்தவள்.

மாமா இந்த முறை வரும் போது எப்படியாவது எங்களுடைய ரேடியோவைக் கொண்டு வருவார் என்ற நம்பிக்கையோடு நானும் தம்பியும் இருந்தோம். ஆனால் அவர் வழமை போல கொண்டுவரவில்லை. எனக்கும் தம்பிக்கும் சரியான கோபம் வந்தது. அவருக்கு முன்னால் காட்டிக்கொள்ளவில்லை. அது சாத்தியமான விடயமும் இல்லை.

இந்த ரேடியோப் பிரச்சனை ஒரு நீண்ட காலப்பிரச்சனை. அப்பாவிடம் ஒரு பழைய பிலிப்ஸ் ரேடியோ இருந்தது. ஆறு மாதத்துக்கு ஒரு தடவை அதற்கு மிகப் பெரிய பற்றி வாங்கிப் போடுவது கட்டுப்படி ஆகாது என்பது கூட பிரச்சனையாக இருந்ததில்லை. வாரத்துக்கு இரண்டு தடைவை மாமரத்துக்கும் புளிய மரத்துக்கும் இடையில் தொடுத்து கட்டியிருந்த ஏரியல் அறுந்து விழ, விழ மறுபடியும் ஏறிக் கட்ட வேண்டும் என்பது பெரிய பிரச்சனை. ஒரு தடவை மாமரத்தில் ஏறும் போது அப்பா சறுக்கி விழுந்தும் விட்டார்.

இந்தக் குத்தியனுக்கு ஏன் இந்த வேலை? என்று அம்மாவிடம் மாமா செல்லமாகத் திட்டினார். அம்மா இதுகளையெல்லாம் காதில் விழுந்த மாதிரியே காட்டிக் கொள்வதில்லை.

இந்த ரேடியோவை நான் முதியான்சேயிடம் கொடுத்து டிரான்சிஸ்டர் ரேடியோவாக மாற்றிக்கொண்டு வருகிறேன் என்று கூறிக் கொண்டு போனவர் தான் இரண்டு வருடமாயும் திருப்பிக் கொண்டு வரவில்லை. ஒவ்வொரு முறையும் வரும் போது அடுத்த முறை கொண்டுவருவதாக சளைக்காமல் கூறுவார்.

கழுவிக் காயப் போடும் போது மாமாவின் கோவணத்துக்குள் காஞ்சோண்டி இலையைப் பூசி விடவேண்டும். தம்பி கண்ணி வெடி வைப்பதற்குத் திட்டம் போட்டது போல திட்டம் போட்டான்.

இவனுடன் சேர்ந்து திட்டம் போடுவது காஞ்சோண்டி இலையை நானே பூசிக் கொள்வதை விட மோசமான நிலைமைக்கு என்னைக் கொண்டு போய்ச் சேர்த்து விடும். இது எனக்குத் தெரியும். அதனால் அவனுடைய திட்டம் பிடித்திருந்தாலும் எடுத்த எடுப்பிலேயே நிராகரித்து விட்டேன்.

சமாதான ரீதியான ஏதாவது திட்டம் போட்டால் தான் சரி என்று நான் கூறியதை தம்பி சற்று சந்தேகத்துடனேயே பார்த்தான்.

தொடர்ச்சி 02ம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

# கற்க தமிழைக் கசடற, நாடுவிட்டு நிற்போர் நிலைக்க நிலத்தில்

தமிழ்மொழியைக் கற்றல், கற்பித்தல் என்ற வகையில் கற்போர், கற்பிப்போர், தமிழ்ப் பெற்றோர், தமிழ்மொழியைக் கற்க விரும்பும் மற்றோர் என்பவர்களின் சிந்தனைக்கு விருந்தாகச் சில கருத்துக்களை முன்வைக்க விரும்பியபோது மனதிற் தோன்றிய எண்ணங்களின் தொகுப்பே இக்கட்டுரையின் தலையங்கமாக மலர்ந்துள்ளது. குறட்பா வடிவமாக உள்ள இத்தலையங்கத்தில் பல எண்ணக்கருக்கள் பொதிந்துள்ளதாக எண்ணுகின்றேன்.

தமிழ் அறிந்த, தமிழ் செறிந்த, தமிழ் பரந்த நல்லுலகு இன்று எம்முன் விரிந்து செல்கின்றது. தகவல் தொழில்நுட்பங்களால் உலகு சுருங்கி விட்டது போன்ற ஓர் மாயத்தோற்றம் ஏற்பட்டிருந் தாலும் காலமும், இடமும் இருந்தபடியே இயங்கிக் கொண்டிருக்கின்றன. மனோன்மணியம் சுந்தரனாரின் பாடலில் பரிணமிப்பது போல

"பல்லுயிரும் பல உலகும் படைத்து அழித்துத் துடைக்கினும்
எல்லையறு பரம் பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும், களி தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன் உதரத்து உதித்து எழுந்து ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையாத
சீரிளமைத் திறனோடு", என்றுமுள செந்தமிழாய், முத்தமிழாய்,
செழுந்தமிழாய், தீந்தமிழாய் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது தமிழ்மொழி, இது என்றும் இயங்கி ஈடில்லா பெருமையடைய வேண்டுமானால்

"சாம்பொழுதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் எந்தன்
சாம்பல் தமிழ் மணத்து வேகவேண்டும்" என்ற உணர்வு உந்துதலும் தமிழர் எல்லோரிடத்தும் ஆழப்பதிந்து நாளைக்கும் எழுச்சிபெற வேண்டும். மொழிதான் ஓர் இனத்தின் குறியீடாகும். குரல் ஒலியால் உயிரினங்களை இனம் காண்பதுபோல மொழி ஒலியால் இனத்தை அடையாளம் காணலாம். குயில் கூவுகின்றது, காகம் கா, கா என்கின்றது. தனக்கென்று ஒரு கூடு கட்டத் தெரியாத குயில், தனது இனத்தைப் பெருக்குவதற்கான முட்டைகளை காகத்தின் கூட்டில் காகத்திற்குத் தெரியாமலேயே இட்டு விடுகின்றது. காகம் தன் முட்டைகளென நினைத்து அடை-காத்துக் குஞ்சுகளைப் பொரிக்கின்றது. குஞ்சுகள் வளர்ந்து தத்தம் இன ஒலிகளை எழுப்புகின்றன. குயிற்குஞ்சுகள் கூக், கூ என்று கூவுவதை அறிந்த காகம் அவற்றைக் குட்டிக் கலைக்கின்றது. அவை எங்கும் சென்று இன்னிசை பரப்புகின்றன.

இதே நிலைதான் இன்று தமிழருக்கு ஏற்பட்டிருக்கின்றது. உலகப்பரப்பில் தொன்மைமிக்க இனமாக வாழ்ந்த தமிழினம் இசைபரந்து வாழ்ந்தும், நாட்டை இழந்து பல்லிடத்தும் பல்லிளித்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. கூடுகட்டுவதை மறந்த குயிலினம் போல, நாடு கட்டுவதை மாறாது நாற்திசையும் அலைந்து நாதியற்று மாற்றாரின் தேசங்களில் மண்டிக்கிடந்து குட்டுப்படுகின்றது என்றாலும் குயில் இன்னிசை எழுப்புவது போலத் "தேமதுரத் தமிழ் ஓசையை" உலகமெலாம் பரப்புகிறது தமிழினம். புலம்பெயர்ந்து வாழும் தமிழர் "நலந்தீங்கினும்" தமிழை மறந்தறியாது ஒலிக்கவும், உவகை கொள்ளவும், தலைப் பட்டுள்ளனர். இந்தத்தமிழ் ஒலி அல்லது தமிழோசை வலுப்பெறும் வகையில் உலகப்பேரவையில் செம்மொழிகளில் ஒன்றான மதிப்புத் தமிழ்மொழிக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதனை "மறைப்பினுள்ளும் ஒரு மகத்துவம்" என்று நாம் எடுத்துக்கொண்டு பிறநாடுகளில் உள்ள நம் தமிழ்ச்சிறார்கள் தமிழ்மொழியைக் கற்பதிலும் தமிழ்ப்பண்பாடுகளைப் பேணுவதிலும் முன்னுதாரணமாக வாழ்வதற்கு எம்மாலான அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டியது தலையாய கடமையாகின்றது.

புலம்பெயர்ந்து நாம் வாழும் நாடுகளில் அந்தந்த நாடுகளுக்குரிய தாய்மொழியாகவும், கல்விமொழியாகவும், அல்லது போதனா மொழியாகவுமிருக்கின்றது. இந்த நிலையில் தமிழை ஒரு பாடமாகப் பாடவிதானத்தில் உள்ளீடு செய்யமுடியாதுள்ளது. இக்குறையைப் போக்குவதற்காக தமிழார்வலர்களின் பெரு முயற்சி யால் தனியார் தமிழ்ப்பாடசாலைகள் ஆங்காங்கே நிறுவப்பட்டு தாய்மொழியாம் தமிழ் கற்பிக்கப்பட்டு வருகின்றது என்றாலும் இது ஒரு முழுமையைப் பெறவில்லை. இதற்கு அந்நியமொழி மோகமும், பெற்றோரின் ஏனோதானோ என்ற மனப்பான்மையும், தகமையுள்ள ஆசிரியர்களின் பற்றாக்குறையும் காரணமாக அமைகின்றன.

கனடா நாட்டில் தமிழ்க்கலைத் தொழில்நுட்பக் கல்லூரி பல கிளை நிறுவனங்களை உண்டாக்கித் தமிழ் மொழித்திறன் தமிழ் மாணவர் மத்தியில் ஊக்குவித்து வருகின்றது. எனினும் இங்குள்ள மொத்த மாணவர் தொகையில் 30வீத மாணவரே இதில் நாட்டம் கொண்டுள்ளதாக அறியக் கிடக்கிறது. இதற்குக் காரணமாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

(1) பெற்றோரினதும் பிள்ளைகளினதும் ஆங்கிலம் மற்றும் பிரான்சு மொழிமோகம்

(2) தமிழ்மொழி கற்பதால் வேலை வாய்ப்புக்கள் இராது என்ற எண்ணம்

(3) தமிழ் கற்பதற்கான நேரப் பங்கீட்டைச் செய்வதிலுள்ள வேலைப்பழுவும், நேரமின்மையும்

(4) தமிழைக் கற்பது சிரமம் என்ற நினைப்பும், சுமையும் எண்ணித் துணிந்து செயற்பட்டால் இவற்றையெல்லாம் புறந்தள்ளி தமிழ்மொழியை நம்சிறார்கள் கற்றுப் பயன்பெற முடியும்.

இதற்குத் தாய்மொழிப் பற்று, இனப்பற்று, தேசியப்பற்று முக்கியமானது. மொழிகளைத் தாய்மொழி, இரண்டாம் மொழி, போதானாமொழி, சர்வதேசமொழி, தொடர்புமொழி, அரசகரும் மொழி என வகைப்படுத்தலாம். எது எப்படி இருப்பினும் தாய்மொழி எல்லோருக்கும் முக்கியமானது. தாய்மொழி எல்லோருக்கும் வீட்டு மொழியாகக் கட்டாயம் இருக்க வேண்டும். பல்லின, பலமொழி, பலசமய மக்கள் வாழ்கின்ற சூழலில் வீட்டுமொழி, பழகுமொழி என்பன அந்தந்த இனமக்களுக்குத் தாய்மொழியாகவே இருத்தல் வேண்டும். தமிழர்களாகிய நாங்கள் மட்டும் ஆங்கிலம் பேசுவதை ஒரு நாகரீகம் என எண்ணி வாழ்கின்றோம். இது ஒரு வெட்கக்கேடான விடயம். 2000ம் ஆண்டுகளுக்கு முன்னர் பேச்சு வழக்கிலும், எழுத்துவழக்கிலும் இருந்து யூதர்களின் கீபுறுமொழி அழிந்து போனது. கிட்லரின் சர்வாதிகார ஆட்சி யூதமக்களைக் காட்டு மந்தைகளைப்போல உலகெங்கும் விரட்டியது. இலட்சக்கணக்கில் யூதமக்களைக் கொன்று குவித்தது. உலகின் மூலை முடுக்குகளில் யூதர்கள் மறைந்தும், ஒளிந்தும் வாழ்ந்தனர். ஆனால் இன்று தமது கீபுறுமொழியை வளப்படுத்தி நிலைப்படுத்தி அபிவிருத்தி செய்துள்ளனர். அவர்களின் மொழிப்பற்றே காரணம்.

எமது தமிழ்மொழி எத்தனையோ அக்கினிப் பிரவேசங்கள் நடந்தபோதும் இன்றும் வாழும் மொழியாக இருக்கின்றது "மெல்லத்தமிழினிச் சாகும்" என்று "சொல்லத்தகாதவன்" சொன்னான் என்றுதான் பாரதியார் பாடினார். எனவே சொல்லத்தகாதவர் பலபேர் சொன்னாலும் "கண்ணுதற் பெருங் கடவுளும், கழகமோடு அமர்ந்து, பண்ணுறத் தெரிந்தாய்ந்த பைந்தமிழ்" மெல்ல மெல்ல வாழ்ந்தே தீரும். அதற்கான கட்டியங்கள் கூறப்பட்டே வருகின்றன. அறிவியல் வளர்ச்சியின் வேகமும், கணினி மயப்படுத்தலின் கடுகதியும் "கணினி மொழியையே" உலகின் பொதுமொழியாக ஆக்கிவிடப்போகின்றது. இம்மொழியில் குறியீடுகளும், சமன்பாடுகளும், உருக்களும், கருக்களுமே எழுத்துக்களாகவும், சொற்களாகவும் பரிமாணமடையப் போகின்றன ஆனாலும் பேச்சுவழக்கில் ஒருவரோடொருவர் அளவளாவும் மொழியாகவும், ஆக்கஇலக்கிய மொழியாகவும் அவரவர் தாய்மொழிகளே இருக்கப்போகின்றன. இந்த வகையில் தமிழ்மொழியைக் கற்றல், கற்பித்தல் தொடர்ந்தும் அசைவியக்கத்தொழிற் பாடாகவே இருக்கப் போகின்றது. "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் மகிமையில்லை". திறமான தமிழ்ப்புலமையோடு செந்தமிழ் செழிப்புறச் சேர்ந்து பணியாற்ற வேண்டியகாலம் அண்மித்து விட்டது. நாளைய எமது சந்ததி சேமமுறத் தமிழ்மொழித்திறன்பெற ஆவன செய்வோம்.

கற்றல் என்பது இயற்கையான ஒரு செயற்பாடாகும். மனிதக்குழந்தைகளும், உயிரினங்களின் இளந்தைகளும் கருவில் இருக்கும் நாள் முதலாகவே கற்கின்றன என்பது உளவியலாளரின் ஆய்வுமூலம் கிடைக்கப்பெற்ற செய்திகளாகும். குழந்தைகளும் கட்புல செவிப்புலப் பொறிகள் மூலம் ஓசை, ஒலிகளையும், உருவஅருவ வேறுபாடுகளையும் கற்றுக் கொள்கின்றன. இவற்றின் மூலம் பெற்றோரையும், மற்றோரையும் இனங் காண்கின்றன. சூழலிலுள்ள பொருட்களை வேறுபடுத்தி அறிகின்றன. பெற்றாரையும், மற்றவர்களையும் பின்பற்றிச் சில பொறிமுறை அனுகூலங்களைப் பெற்று நடத்தல், ஓடுதல், படுத்தல், பாய்தல், பேசுதல், அசைதல், பாடுதல் போன்ற உயிரியல் உத்திகளைக் கற்றுக் கொள்கின்றன. அறுசுவைகளை உணர்தல், ஒளி, ஒலிப் பரிமாணங்களை வேறுபடுத்தல் என்பவற்றைத் துல்லியமாக இனங் காண்கின்றன. முயன்று தவறும் முயற்சிகளினாலும் மீள்பயிற்சி களாலும் மேற்படி கற்கும் திறன்கள் விருத்தியடைகின்றன.

"குலவித்தை கல்லாமற் பாகம்படும்", "நட்டுவப்பிள்ளைக்கு நொட்டிக் காட்ட வேண்டியதில்லை" என்பன போன்ற சொற்தொடர்கள் இதனையே சுட்டி நிற்கின்றன.
விருத்தியடையும் திறன்கள் விவேகஈவிற்கும் தனியாள் வேறுபாட்டிற்கு ஏற்ப மேலோங்கியும் மந்தமடைந்தும் காணப்படும்.

"வான் குருவியின் கூடு, வல்லரக்குத், தொல்கறையான்,தேன்சிலம்பி
யாவற்கும் செய்தரிதால் - யாம்பெரிதும்
வல்லோமே என்று வலிமை சொல வேண்டாம்காண்
எல்லோர்க்கும் ஒவ்வொன் றெளிது"

என்ற பாடற் கருத்து இங்கே நோக்கத்தக்கது. சிறுவர்களுக்கான பாடவிதானங்களும், பாடத்திட்டங்களும் இந்த உளவியல் அடிப் படையிலேயே "சிறுவர்பூங்காக்களில்" மொன்றசோரி அம்மையார் போன்றோரினால் வகுக்கப்பட்டன. தமிழர் மத்தியில் இத்தகைய கல்விமுறையை ஆரம்பத்தில் ஒளவையார் தமது ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி போன்ற பாடல்களாலும் பிறவற்றினாலும் ஆக்கினார் என்றே சொல்லத் தோன்றுகின்றது.

தமிழ்நாட்டிலிருந்த திண்ணைப்பள்ளிக்கூடங்களும் ஆரம்பக் கல்விக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தன. கற்றல் நடவடிக்கைகளுக்கு ஆசிரியரின் நெறிப்படுத்தல் மிக அவசியம். "குரு இல்லாத வித்தை மேலுமில்லைக் கீழுமில்லை" என்பது பழமொழி. தமிழர் மத்தியில் "பள்ளிக்குவைத்தல்" என்ற ஏடு தொடக்கும் வைபவம் 3வயதிற்கும் 5வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர்கட்கு சமயச்சடங்காக நடத்தப்படுகின்றது. இதில் உச்சரிப்பிற்கும், எழுத்திற்கும், குருவணக்கத்திற்கும், இறைவணக்கத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இறைவனே குருவடிவாக வந்து உபதேசித்ததாகஅறிகின்றோம். "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்று அருணகிரியார் முருகனை வேண்டுகிறார். ஆசிரியர்கள் ஆக்கப்படுவதில்லை, அவர்கள் பிறக்கிறார்கள் என்பது ஒரு கூற்றாகும், ஆனால் இக்காலத்தில் ஆசிரிய பயிற்சிக்கல்லூரிகள் மூலம் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். இதிற் தவறில்லை.

திரு. நா. க.சண்முகநாதபிள்ளை

வேறு தொழில் வாய்ப்புகளைப் பெறாதவர்களே பலர் ஆசிரியத் தொழிலுக்கு வந்து சேர்கிறார்கள் என்றதோர் குறையும் உண்டு. புலம்பெயர்ந்து நாம் வாழும் நாடுகளும் இதற்கு விதிவிலக்கல்ல. இதனை நாம் கண்கூடாகக் காணக் கூடியதாக உள்ளது.
இப்படியானவர்கள் தங்கள் உழைப்பொன்றையே கருத்திற் கொள்ளாமல் ஆசிரியத்தொழிற் தகைமையைப் பெருக்கிக் கொள்ளல் வேண்டும். இதற்காக புலம்பெயர்ந்த நாடுகளில் ஆசிரியர்களுக்குத் தமிழ் கற்றல், கற்பித்தலுக்கான பயிற்சிப் பட்டறைகளும், ஆய்வுப் பட்டறைகளும் வதிவடப்பட்டறைகளாக நடத்தப்பட வேண்டும். இவை மீள வலியுறுத்தப்படவும் வேண்டும், இவற்றோடு தமிழ் கற்பித்தல் மேற்பார்வையும் வேண்டும். கனட-ாவில் சர்வதேசமொழிகளைக் கற்பிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதைவிட தமிழ் கற்பிப்பதற்கென தமிழ்ச்சான்றோரால் நடவடிக்கை எடுக்கப்படு கின்றது எனினும் புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள தமிழ்க் குழந்தைகளுக்கு ஒட்டுமொத்தமாகத் தமிழைக் கற்பிப்பதற்கு நிறுவனமயமாக்கப்பட்ட அமைப்பு ஒன்று காலப்போக்கில் உருவாக்கப்படுதல் அவசியம். இதன்மூலம் பொதுவான பாடவ-ிதானம், பாடத்திட்டம், பாடநூல்கள் என்பவற்றை ஆக்கிக் கற்பித்தலை வலுப்படுத்த முடியும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்றும் "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாதது" என்றும் பழமொழிகள் உண்டு. எனவே தமிழ் படிப்பதை, தமிழ் கற்பிப்பதைப் பிற்போடுவோம். தமிழ்தானே வீட்டில் கற்றுக் கொள்ளலாம் என்று பிற்போட்டுவிடாமல் உடனே செயற்படவேண்டும். குழந்தைகளுக்கு எட்டு வயது வரைதான் மூளையில் அதிகூடிய ஆற்றல் வளர்ச்சி ஏற்படுகின்றது. எனவே அப்பராயத்தில் தமிழ் உணர்வை, தமிழ் ஆர்வத்தைச் சிறுவர்களிடம் ஊட்ட வேண்டும். தமிழ்மொழியில் 247 எழுத்துக்கள் இருப்பதால் கற்பது சிரமம் என்பர். இது தவறான ஒரு கருத்தாகும். உண்மையிலேயே தமிழில் 30 எழுத்துக்கள் தான் உண்டு. அதாவது உயிர்எழுத்து 12, மெய்யெழுத்து 18. ஏனைய எழுத்துக்கள் உயிரும் மெய்யும் சேர்வதால் ஏற்படும் 216 உயிர்மெய் எழுத்துக்களாகும். ஆய்த எழுத்து 1.

இனி கசடு அறக்கற்றல் என்பது சந்தேகமும், விபரீதமும் அறக்கற்றல் என்பதாகும். "கல்வி என்ற செடிக்கு அறிவு நீர் வார்த்துச் சிந்தனை எருப்போட்டுச் சந்தேகக் களைகளைப் பிடுங்கிச் செழித்து வளரச் செய்ய வேண்டும்." தமிழ்மொழியைப் பொறுத்த வரையில் தமிழ் நெடுங்கணக்கில் ளகர, ழகர பேதங்கள் மற்றுமஞ் லகர, ரகர, றகர, னகர, ணகர, நகர பேதங்கள் உண்டு. தமிழ்ச் சொற்களைச் சரியாக எழுதவும், உச்சரிக்கவும் வேண்டுமானால் அச்சரசுத்தியாக இப்பேதங்களை உணர்த்தி மாணவர்களுக்குக் கற்பித்தாற்தான் தமிழ் கற்றல் செழுமையும், சிறப்புமடையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. சொல்வதெழுதல், பந்திசந்தி பிரித்து எழுதல், பார்த்தெழுதல், வாசிப்புப் பயிற்சி என்பன வளரும் தமிழ்ச்சிறுவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும். இதற்குத் தமிழ்மொழிப் பற்றும், அர்ப்பணிப்பும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர் மத்தியிலும், தமிழ் கற்பிப்போர் மத்தியிலும் ஏற்படவேண்டும்.

புலம்பெயர்ந்த நாடுகளில் சில ஆண்டுகளாக இந்த வழியில் எடுக்கப்பட்டு வரும் கவிநிலைச் செயற்பாடுகளை நாம் மறுப்பதற்கில்லை. இந்நாடுகளில் வாழும் தமிழர்கள் ஓய்வு, உறக்கமின்றி உழைக்க வேண்டியுள்ளது. வாழ்க்கைச் செலவுகளைச் சமாளிப்பதற்கு இது தேவை. தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் போதிய ஊதியம் வேண்டும். இலவசமாக அவர்கள் கற்பிப்பதில் பல சிக்கல்கள் உண்டு. சேவையாக அவர்கள் இதைச் செய்ய முடியாதுள்ளது. பெற்றோர் முன்வந்து பெற்றார் ஆசிரியர் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரும் இணைந்து நிதியம் ஒன்றை உருவாக்கி இந்தச் சிக்கலிலிருந்து விடுபட வேண்டும்.

தொடர்ச்சி 18ம் பக்கம்

# போவாமா ஊர்கோலம்

இந்தியாவில் இருந்து வந்து கொழும்பு சர்வதேச விமானத்தில் இறங்கி வீடு நோக்கி சென்று கொண்டு இருந்தபோது மனதில் எழுந்த கேள்வி இந்தியா சென்று இருந்த ஒரு கிழமையில் அப்படி என்ன புதுமை இங்கு நடந்துவிட்டது? விமானநிலையத்தில் இருந்து வீடு செல்லும் பாதையெல்லாம் சுத்தமாக்கப்பட்டும், சூழலில் பசுமை நிறம் கூடுதலாகவும், பார்க்கும் மனிதரில் ஒரு செந்தளிப்பும் தோன்றி இருந்தது. கொழும்பு நகரமே அழகு அதிகரித்து காணப்பட்டது. சிந்தித்ததில் புரிய வந்த உண்மை என்னவெனில், கனடாவில் இருந்து சென்றபோது கொழும்புக் காட்சிகள் வறண்டு போனது போலவும், இந்தியாவில் இருந்து திரும்பும்போது இந்தியாவில் பழகிய கண்களுக்கு காட்சிகள் பசுமை கூடியும் இருப்பதாகவும் தென்பட்டது என்பதே.

கொழும்பில் நிற்கும் பத்து நாட்களுக்குள்ளும் யாழ். மண்ணை தரிசிப்பதா, அல்லது கொழும்பில் நின்றுவிட்டு திரும்புவதா என்று சிந்தனைக்கும், ஆசைக்கும் இடையில் நடந்த மனப்போராட்டத்தின் முடிவு, நான் ஸ்பரிசித்த காங்கேசன்துறை மண்ணையும், காற்றையும் மற்றைய இடங்களைப் போல சுதந்திரமாக அனுபவிக்க முடியாது. யாழ்ப்பாணத்தில் எனது இரத்த உறவுகளும் இல்லை. அதனால் இருக்கும் சில நாட்களையும் உறவுகளுடன் கொழும்பிலேயே கழித்து விடலாம் என்பதே. பின்பு இன்னொருதடவை கூடுதலான நாட்கள் குடும்பத்துடன் வந்து யாழ்ப்பாணம் சென்று தங்கலாம் என்று மனம் ஆசைக்கு ஆறுதல் சொன்னது. கொழும்பில் நிற்கும் காலத்தில் கொழும்பு வாழ்க்கையையும் மற்றும் பிரபலமான வியாபார நிலையங்களையும் ஒரு கை பார்த்து விடலாம். Video விலேயே பார்த்த கொழும்பில் நடக்கும் திருமணங்களை, நேரிலேயே கலந்து அனுபவிக்க கூடிய முறையில் எனது சின்னம்மாவின்

## சாதாரண மனிதனின் பார்வையிலிருந்து

மகனின் திருமணமும் நல்ல ஒரு சந்தர்ப்பத்தையும் கொடுத்தது.

வாழ்க்கை செலவு அதிகரித்து விட்டபோதும், விலைகள் உச்சநிலையடைந்தும் ஏதோவகையில் மக்கள் வாழ்க்கையை ஓட்டுகிறார்கள். கனடிய மண்ணில் நடைபெறும் திருமண விழாக்களுக்கு ஈடாக திருமணக் கொண்டாட்டங்களும் நடைபெறுகின்றன. பெருமளவில் தமிழர்களின் வாழ்க்கையில் வெளிநாட்டு பணமே கைகொடுப்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. பல தொடர்மாடிக் கட்டிடங்களை கட்டி, விற்பனை செய்து வெற்றியாக வாழ்க்கை நடத்தும் இளைஞர்கள் இருவரை சந்திக்கும் சந்தர்ப்பம் உண்டானது. அவர்களிடம் இருந்து கிடைத்த தகவலின்படி கனடா தவிர்ந்த நாடுகளில் வாழும் அனேக தமிழர்கள்தான் கூடிய அளவில் அந்த வீடுகளில் முதலீடு செய்வதாகவும் ஓய்வு காலத்தில் தாய்நாடு திரும்புவதற்கு இப்போதே Flat ஒன்றை வாங்கிவிடுவதை முதல்படியாக செய்வதாகவும், கனடாவில் வாழும் தமிழர்கள் ஏன் அப்படி ஒன்றும் செய்வதில்லை? அவர்களுக்கு தாய்மண்ணில் அக்கறை இல்லையா என்ற கேள்வியையும் கேட்டு வைத்தார்கள். அவர்களுக்கு எனது அறிவுக்கும், அனுபவத்திற்கும் கிட்டிய வகையில் சொன்ன பதில் என்னவெனில் வீடு விற்பனை முகவராக இருப்பதனால் தமிழர்களுடன் அன்றாடம் நேரடி அனுபவம் உண்டு. அதன்படி கனடாவில் வாழும் தமிழர்களின் எண்ணங்களும் நடவடிக்கைகளும் பொதுவாக சுயமாக இருப்பதில்லை. தொழில் செய்வது தொடக்கம், வீடு, கார் வாங்குவதுவரை மற்றவர்கள் செய்வதை பார்த்துதான் செய்வார்கள். கொஞ்சம் பொறுத்திருங்கள் கனடாவில் வாழும் ஒன்றிரண்டு தமிழர்கள் இங்கு வந்து Flat வாங்கியதைக் கேள்விப்பட்டதும் அடித்து பிடித்துக் கொண்டு வந்து இப்போது 60 இலட்சம் பெறுமதியான வீடுகளுக்கு இரண்டு மடங்கு பணம் கொடுத்து வாங்குவார்கள். அதுதான் பெரும்பான்மை கனடாத்தமிழர்களின் வாழ்க்கைமுறை என்பதே.

தாய்மண்ணில் அனுபவிக்க விரும்புவதில் இலங்கை வானொலி நிகழ்ச்சிகளும் ஆகும். எமது இளமைக்காலத்தில் சிந்தனைக்கு இனிமையான தீனி போட்டதில் அதன் பங்கு ஒப்பிடமுடியாதது. அந்தக்கால நினைவுகளுடன் வானொலிப் பெட்டியைத் திருப்பினால் ஏதோ ரொறொன்ரோவில் ஒலிபரப்பாகும் வானொலி நிகழ்ச்சியை கேட்பது போன்றதொரு உணர்வு. அலைவரிசையில் (FM) உள்ள மிகத் தெளிவான கேட்கும் தன்மையை தவிர முன்னைய வானொலி நிகழ்ச்சிகளுக்கு கண்ணூறு பட்டு விட்டதோ என்று எண்ணத்தூண்டும் வகையில் நிகழ்ச்சிகள். வானொலியில் அறிவிப்பாளர்கள் தம்மை ஏதோ அதிமேதாவிகள் என்று எண்ணிக் கொண்டு போலும் அறிவிப்பு என்ற பெயரில் அபத்தமான உளறல்கள். கொச்சை தமிழ் தாண்டவம் ஆட, இசை, பாடல்கள், கலைத்துறை, பொது அறிவு என்பன போன்றவற்றில் ஞானசூனியங்களாக இருப்பவர்கள் தான் அறிவிப்பாளர்களாக இருப்பார்கள் போல எண்ணத்தூண்டும் வகையில் நிகழ்ச்சிகள். தமிழ் வானொலி நிகழ்ச்சிகளுக்கு பிறந்த மண் முதலாக உலகில் தமிழர் வாழும் எல்லாப்பகுதிகளிலும் ஏதோ சாபக்கேடு போலும். தடி எடுத்தவர்கள் எல்லாம் தண்டல்காரர்கள் ஆன கதைபோல ஆன கதைதான் என்று எண்ணிக்கொண்டு அடித்து மூடிய வானொலியை திரும்பும்வரை திறக்கவேயில்லை. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் சன்.டி.வி. போகும் இடம் எல்லாம் கணவனுக்காக..., செல்வி....செல்வி, மெட்டி ஒலி.... என்று பாடல்கள் ரீங்காரித்த வண்ணம் இருக்கும். தமிழர்களுக்கும், ரசனைக்கும் வந்த கேடு அது. கதைகளிலும் காட்சிகளிலும் யதார்த்தம் என்பதே கடுகளவும் காணமுடியாது. வானொலி நிகழ்ச்சிகளிலும் தொலைக்காட்சிகளிலும் தரம் குறைந்ததற்குக் காரணம் மக்களா? நடத்துபவர்களின் சிந்தனை வறட்சியா?

புறப்படுவதற்கு ஒரு சில நாட்கள். மனம் சோர்வடைய ஆரம்பித்து விட்டது. இனி என்ன பழைய குருடி கதவைத் திறவடி என்ற கதையாக கனடிய வாழ்க்கையும், குளிரும் என்று வெறுப்பு ஒருபுறம். உறவுகளை பிரிய வேண்டும். தாய்மண்ணிற்கு திரும்புவது எப்போது? என்பன போன்ற கேள்விகளும் கவலைகளும் வாட்ட ஆரம்பித்து விட்டன. இதற்கிடையில் இன்னொரு சுனாமி தாக்க வருகின்றது என்று தொலைக்காட்சிகளிலும், தொலைபேசிகளிலும் பரபரப்பு. தங்கையின் ஆறுமாடி கட்டிட வீட்டில் ஆறாவது மாடியில் நின்று பார்த்தால் இரவு பத்துமணி, கடலோ அமைதிக் கோலம், மக்களோ துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று பெட்டி படுக்கைகளுடன் ஓட்டம். என்ன செய்வது நாமும் இறங்கி ஓட வேண்டி இருக்குமோ என்ற கேள்விகள் வேறு. கனடாவில் மனைவி பிள்ளைகள் பற்றிய கவலை ஒருபுறம். ஆறாவது மாடி உயரத்திற்கு நீர் பாயாது என்ற நப்பாசை நம்பிக்கையுடன் நித்திரையில் விழுந்ததே தெரியவில்லை. அதிகாலை ஐந்துமணியளவில் இனிமையான பறவை ஒலிகளின் சத்தத்தில் கண்விழித்தால் சுனாமியா, யார் சொன்னார்கள் என்பது போல ஒன்றுமே நடக்காதது போன்று மக்களின் நடமாட்டம். மனதிற்கு ஆறுதல்.

புறப்படும் தினம் அம்மாவிடமும், தங்கை குடும்பத்திடமும் பிரிய மனமில்லாமல் விடைபெற்றுக்கொண்டு அதிகாலை இரண்டு மணியளவில் விமானநிலையத்தில் சங்கமம். நாலு மணிக்கு விமானம் புறப்படும். எயர் லங்கா விமான பயணச் சீட்டை கொடுத்து பொதிகளை சமர்ப்பிக்கலாம் என்றால் தீர்த்தக்கிடங்கில் மக்கள் வெள்ளம் போல ஜனத்திரள். சில நிமிடம் நின்று அவதானித்து விரைவாக முன்னோக்கி செல்லும் நிரையைக்கண்டு பிடித்து அலுவல்களை முடித்துக் கொள்ளலாம் என்று நிற்கும் போது கவனித்தால் பக்கத்து நிரை ஆடாமல் அசையாமல் அப்படியே நிற்கின்றது. வெளிநாட்டவர்கள் உட்பட்ட பல பயணிகள் வெறுத்துப்போய் பொறுமையிழந்து நிற்கின்றார்கள். அப்படி என்னதான் அங்கு நடக்கின்றது என்று கவனித்தால் புளி முட்டை உருவத்தில் ஒரு தமிழ் மகன் வேர்த்து விறுவிக்க, அணிந்துள்ள மேல்சட்டை கழன்றும் கழராமலும் தங்கவடங்கள் போன்ற சங்கிலிகள் மின்னவைக்க கொண்டுவந்திருந்த பலகார முட்டைகளை நிலத்தில் பரப்பி வைத்து ஏதோ Flea Market இல் வியாபாரம் செய்ய ஆரம்பிப்பவர்கள் பாணியில், அளவுக்கு அதிகமான உணவுப்பண்டங்களை பிரித்து வேறாக்கி உடுப்பு பெட்டிகளில் செருகிக்கொண்டு இடத்தையும், நிரையையும் வீணடித்து, மற்றவர்கள் பற்றியும் நேரமினக்கேடுபற்றியும் கவலையில்லாமல் தனது காரியத்தில் நிற்கின்றார். அவருக்கு சாக்கு முட்டைகளுக்கு தங்கச்சங்கிலிகளால் சோடனை செய்தது போன்று மனைவியும், பிள்ளைகளும் உதவி வேறு. வெளிநாடு போய் திரும்பி வரும்வரை அந்த உருவங்களுக்கு போதுமான அளவு பண்டங்களை கொண்டு செல்ல எத்தனிப்பு போலும். விவஸ்தையே இல்லாத ஜென்மங்கள் என்று ஏற்கனவே தாய்மண்ணை விட்டு செல்லும் கவலையில் இருந்த மனம் திட்டிக்கொண்டது.

விமானம் கனடா நோக்கி பறந்தது, பறந்தது, பறந்து கொண்டே இருந்தது. இலங்கைக்குப் போகும்போது ஊருக்கு செல்லும் உற்சாகத்தில் களைப்பே தெரியாது. ஆனால் திரும்பும்போது உடலும் மனமும் சோர்ந்து இருப்பதனால் விமானப்பயணம் வெறுப்பேற்றி விடும். முன்பு பெரிதாக தெரிந்த விமானத்தின் இறக்கைகள் மெல்லியவையாகவும், தின்பண்டங்களை கொண்டு வந்திருப்பவர்களின் நிறைகளை இதனால் தாக்கு பிடிக்க முடியுமோ என்ற கவலைகள் வேறு, நித்திரையும் இல்லை, இலங்கை செல்லும்போது விமானத்தில் ஒளிபரப்பிய அதே திரைப்படங்களும் பாடல்களும் நாராசமாக வெறுப்பேற்றின. வழமையாக கனடா திரும்பும்போது இங்கிலாந்தில் ஒரு சில நாட்கள் நின்று களைப்பை ஆற்றிக்கொண்டு கனடாவிற்கு பறப்பதுண்டு. ஆனால் அப்படி இம்முறை செய்ய வசதி வராததினால் பாரிஸில் அடுத்த விமானத்தை பிடிப்பதற்காக இறங்கி நின்றபோது வாழ்க்கையே சூனியமாகிவிட்டது போன்ற உணர்வு. நித்திரையின்றி கண் எரிவும், உடல் நோவும் சொல்லி முடியவில்லை. உடல் நோவிற்கு Tylenol கொண்டு வரவில்லையே என்ற கவலை. அதுபற்றியெல்லாம் சிந்திக்காத பெற்றோர்களின் குழந்தைகள் வீரிட்டு அழுது வாழ்க்கையை வெறுப்பேற்றின. அடுத்து மாறி ஏறிய ஏயர் கனடா விமானமும் பறந்து கொண்டே இருந்தது. ரொறொன்ரோ விரைவாக வரமாட்டாதா? என்ற ஏக்கம் ஒருபக்கம், உடல் உளைச்சல்



ஒருபக்கம். ரொறொன்ரோ வரவே மாட்டாதா? திருவிளையாடல் திரைப்படத்தில் அவன் வரவே மாட்டான் என்று தருமி பாத்திரத்தில் நாகேஷ் கத்தியது போன்று கத்தவேண்டும் போல இருந்தது. அவ்வளவு வெறுப்பு. ஒருவழியாக ரொறொன்ரோ விமானநிலையத்தில் இறங்கி பொதிகளை தேடிப்பிடித்து நடக்கவே முடியாமல் வெளியில் வந்தால் ஏதோ இருண்ட கண்டத்திற்குள் இருப்பது போன்ற உணர்வு. ஆனாலும் எங்கிருந்தோ பிள்ளைகள் ஓடி வந்து கட்டிக்கொள்ளவும் மனம் ஆறுதல் அடையத் தொடங்கியது.


இந்த தொடரை படித்த பலர் நன்றாக ரசித்ததாக பாராட்டிய போதும் ஒரு சிலர் இங்கிலாந்தில், இலங்கையில், இந்தியாவில் பார்த்த இடங்களை பற்றியும் உங்கள் பாணியில் சொல்லி இருந்தால் இங்கிருந்து போவோரையும் பார்க்கத்தூண்டியது இருக்குமே என்று ஆதங்கப்பட்டார்கள். உண்மைதான் ஆனால் ஒவ்வொருவருக்கும் அங்கு போகும் போது அவரவர் விருப்பப்படி பல இடங்கள் பார்க்க இருக்கும். அவர்களது பார்வைகளும், அனுபவங்களும், இரசனைகளும் வேறாகவே இருக்கும் என்பதனால் அதுபற்றி எழுத விரும்பவில்லை. ஆனால் சென்று வந்த பலர் அதிலும் இந்தியாவிற்கு சென்று வந்தவர்கள், தாம் ஏதோ ஆயிரக்கணக்கில் பணம் செலவு செய்து அங்கு போனவர்களாம். அங்கு உணவும், பிச்சைக்காரர்களும், தங்குமிடங்களும் தங்கள் பயணத்தை கெடுத்து விட்டதாகவும் குறைசொல்வதைக் கேட்டு இருக்கின்றோம். அவர்களுக்கு சொல்ல விரும்புவதெல்லாம் நீங்கள் உங்கள் மனத்தினாலும், நடத்தைகளாலும் பிச்சைக்காரர்கள் ஆகிவிடாதீர்கள். பணத்தை மிச்சம் பிடிப்பதற்காக தரம் குறைந்த விடுதிகளில் தங்குவதையும், உண்பதையும் தவிர்த்து விடுங்கள். நீங்கள் பாவித்து களித்த உடை புடவைகளை அங்கு எடுத்துச் செல்லுங்கள். செலவு செய்யும் பணத்தில் ஒரு பகுதியை சில்லறையாக மாற்றி வைத்து கோவில்களுக்கு செல்லும்போது தருமம் கேட்பவர்களின் கைகளில் கொடுங்கள். அவர்களின் கண்களில் தெரியும் நன்றி ஒளி உங்கள் ஆன்மாவை குளிர வைக்கும்.

பயணம் நிறைவு பெறுகிறது.
பார்வைகள் தொடரும்.

*பயணம் தொடரும்...*

பரம்ஜி

ஒரு சாதாரண மனிதன்

**உங்கள் பிள்ளைச் செல்வங்களுக்கு எமது தாய் மண்ணுடன் ஒரு தொடர்பினை ஏற்படுத்த அல்லது உங்கள் ஓய்வு காலத்தை அங்கு இன்பமாகக் களித்திட இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் வீடு நிலங்களில் முதலிட எண்ணுகிறீர்களா? நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்**

பரம்ஜி - 416.230.1107

**PARAM. G GNANASWARAN**
Sales Representative

**HOME LIFE GTA REALTY INC.**
1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON


HOMELIFE HIGHER STANDARDS

416.321.6969
905.670.9969
(Mississauga)
paramg@themathuram.com

# உலகின் அதிவேக மனிதன் POWELL

## விளையாட்டு செய்திகள்

சென்ற கிழமை உலகின் அதிபிரசித்த பெற்ற ஒலிம்பிக் விளையாட்டுமைதானமான ATHENS - OLYMPIC STADIUM த்தில் ASAFA POWELL 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில், 9.77 செக்கனில் ஓடி முடித்து உலக சாதனை ஏற்படுத்தினார். இதன் மூலம் உலகின் அதிவேக மனிதன் என்னும் சிறப்பை பெறுகின்றார். Jamaica நாட்டை சேர்ந்த இவர் 2002 அமெரிக்க நாட்டை சேர்ந்த
TIM MONTGOMERY ஏற்படுத்திய 9.78 செக்கன் உலக சாதனையை முடியடித்துள்ளனர்.



169

ASAFA POWELL of Jamaica waves to the crowd after cloking a 9.77 in the 100 metres to set the world record at a Grand Prix event at Olympic Stadium in Athens.

FASTEST TIMES

The progression of the men's 100 - metre world record, as recognized by the IAAF

| | | |
|---|---|---|
| 10.6 | Donald Lippincott, United States | July6, 1912 |
| 10.4 | Charles Paddock, United States | April23, 1921 |
| 10.3 | Percy Williams, Canada | Augu9, 1930 |
| 10.2 | Jesse Owens, United States | June20, 1936 |
| 10.1 | Willie Williams, United States | Augu3, 1956 |
| 10.0 | Armin Hary, West Germany | June21, 1960 |
| 9.99 | Jim Hines, United States | June20, 1968 |
| 9.95 | Hines | Oct14, 1968 |
| 9.93 | Calvin Smith, United States | July3, 1983 |
| 9.92 | Carl Lewis, United States | Sept24, 1988 |
| 9.90 | Leroy Burrell, United States | June14, 1991 |
| 9.86 | Carl Lewis, United States | Augu25, 1991 |
| 9.85 | Leroy Burrell, United States | July6, 1994 |
| 9.84 | Donovan Bailey, Canada | July27, 1996 |
| 9.79 | Maurice Greene, United States | June16, 1999 |
| 9.78 | Tim Montgomery, United States | Sept14, 2002 |
| 9.77 | Asafa Powell, Jamaica | June14, 2005 |

அமெரிக்காவில் வொஷிங்டன் நகரில் நடைபெற்ற ஹெவி வெயிட் குத்துச் சண்டை போட்டியில் அயர்லாந்து வீரர் கெவின் மெக்பிரைடு விட்ட குத்தில் மைக் டைசன் ஆறாவது சுற்றில் விழுந்துகிடக்கும் காட்சி.



## HEAVY WEIGHT குத்துச்சண்டை வீரர் மைக் டைசன் ஓய்வு....!!

உலக ஹெவி வெயிட் குத்துச்சண்டை வீரரான மைக் டைசன் தொடர் தோல்விகளால் ஓய்வு முடிவை அறிவித்து விட்டார். அமெரிக்காவில் வொஷிங்டன் நகரில் நடந்த போட்டியில் அமெரிக்காவின் புகழ்பெற்ற ஹெவிவெயிட் குத்துச்சண்டை வீரரான மைக் டைசனும், அயர்லாந்து வீரர் கெவின மெக் பிரைடும் மோதினர்.

இதில் ஆறாவது சுற்றிலேயே முன்னாள் ஹெவிவெயிட் சாம்பியனான மைக் டைசன், கெவினிடம் தோல்வியடைந்தார். எனவே இன்னும் குத்துச்சண்டை போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெறமுடியாது என்பதை உணர்ந்த டைசன் ஓய்வு முடிவை அறிவித்து விட்டார்.

இது குறித்து டைசன் போட்டிக்குப் பின்பு நேற்று முன்தினம் கூறியதாவது - “நான் இனிமேல் சண்டையிட முடியாது, தொடர்ந்து தோற்க விரும்பவில்லை” என்றார். மேலும், “இனிமேலும் நான் குத்துச்சண்டை போட்டிகளில் கலந்து கொள்ள விருப்பமில்லை. இது எனக்கு அலுத்துவிட்டது. எனது விளையாட்டு வாழ்க்கை முடிவுக்கு வந்து விட்டது. அது முடிவடைந்துவிட்டது” என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 20 வருட காலமாக குத்துச்சண்டை போட்டிகளில் பங்கேற்று வரும் மைக்டைசன் பல்வேறு முரண்பாடான பிரச்சினைகளில் சிக்கியவர். 1987 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரை ஹெவிவெயிட் சாம்பியன் பிரிவில் யாராலும் தோற்கடிக்க முடியாத ஒரு வீரராக இவர் வலம் வந்தார். பின்பு பல்வேறு பிரச்சினைகள் மற்றும் வழக்குகளில் சிக்கி தனது பெயரையும் புகழையும் மைக்டைசன் கெடுத்துக் கொண்டார். கற்பழிப்பு வழக்கு, ஹோட்டலில் அடிதடி வழக்கு போன்றவை இதில் அடங்கும்.

### எஸ். கணேஷ்

தவிர மற்றொரு குத்துச்சண்டை வீரரான இவாண்டர் ஹோலிபீல்டை ஒரு போட்டியின் போது, தோல்வி பயத்தால் காதைக் கடித்ததற்காக ஒரு வருட தடையும் டைசனுக்கு விதிக்கப்பட்டது. “நான் இனிமேலும் சண்டையிட முடியாது. எனது சிறப்பான நாட்கள் முடிவடைந்துவிட்டன. இன்னும் என்னால் நன்றாக சண்டையிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. இன்னும் சண்டையிட என்னிடம் எதுவும் இல்லை” என்று மிகுந்த விரக்தியுடன் அவர் தெரிவித்தார்.

கெவினுக் கெதிரான ஆறாவது சுற்றில் மைக்டைசன், அயர்லாந்து வீரரை தலையால் முட்டினார். பின்பு கையை பிடித்து இழுத்தார். ஏற்கனவே தென்னாபிரிக்க வீரர் பிரான்கோயிஸ் போத்தாவிற்கு எதிரான போட்டியின் போது தோல்வி பயத்தால் டைசன், அவரது கையை உடைத்தார். அதே போல இந்தப் போட்டியிலும் செய்து விடுவோரோ என்ற பயம் அனைவருக்கும் ஏற்பட்டது. இத்துடன் அவரது குத்துச்சண்டை வாழ்க்கை முடிவுக்கு வந்தது.

டைசன் முட்டியதால், கெவினுடைய இடது கண்ணுக்கு கீழே காயம் ஏற்பட்டது. இதனால் நடுவர் ஜோ கோர்டெஸ் டைசனுக்கு இரண்டு புள்ளிகளை (தண்டனையாக) குறைத்தார். ஆறாவது சுற்றில் அயர்லாந்து வீரர் கெவின் மெக்பிரைடு விட்ட குத்துக்களால் தாக்குபிடிக்க முடியாத டைசன் வளையத்தில் சரிந்தார். பின்பு தரையில் விழுந்தார். பின்பு டைசன் சிறிது நேரத்திற்கு பின்பு எழுந்து தனது இடத்திற்கு திரும்பினார். மீண்டும் அவரது மறுவரவு தோல்வியில் முடிந்து ஓய்வுக்குச் சென்று விட்டது.




* காற்றுக்கு எதிரே வீசிய தூசிகள்தன் கண்ணிலேயே வந்து படிகின்றன. சான்றோர் மீது செலுத்திய துன்பங்கள் அவைகளைச் செலுத்தியவனையே அதிவேகமாக வந்து தாக்குகின்றன.


* செருக்கையும் பொறாமையையும் ஒழித்துவிடு. பிறருடன் ஒத்திருந்து பொது நன்மைக்கு உழைக்கக் கற்றுக் கொள்ள. நம் நாட்டுக்கு இத்தகைய தொண்டர் தேவை.


ஞானம்ஸ் ஸ்ரூடியோ

1 Hour Photo Lab: 3 x 5 & 8 x 12
Professional Photographer - கதிர்- 416-750-8118
2381 Eglinton Ave., E.,
Kennedy / Eglinton, Scarborough



ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.


தொடர்புகளிற்கு: 416-286-2880



அனுபவமும், திறமையும், பொறுமையும் இணைகிற போது உயர்ந்த இலக்குகள் இலகுவாக சாத்தியமாகும்

HOMELIFE HIGHER STANDARDS
HomeLife GTA Realty Inc. Broker
1711 McCowan Raod, Suite 206
Toronto, Ontario M1S 3Y3
T. 416.321.6969 F. 416.321.6963

Nel Ketha B.Sc. (Ag)
Sales Representative
416.677.4707
knellinathan@trebnet.com



RAFFLE CLASS AND HIGHLY PROFESSIONAL



# புதிய ஆதனம் வாங்கும் விற்கும் பத்திரத்தில் ஒப்பமிடும்....

## தொடர் - 209

கனடாவில் இரண்டு விதமான காலநிலைகள் தான் இருக்கும்போலத் தோன்றுகின்றது. கடும்குளிர், தாங்கமுடியாத வெப்பம். இவற்றிற்கு இடைப்பட்ட மற்றைய இரண்டு காலநிலைகள் இல்லைபோல் தோன்றுமளவிற்கு வெப்பமும் குளிரும் மக்களை வாட்டுகின்றது.

அனேகமான மக்களின் வாழ்வின் ஆதனம் விற்றல் வாங்கல் என்ற நிகழ்வே மிகப்பெரிய Transaction ஆக இருக்கக் கூடும். புதியதாக நிர்மாணிக்க இருக்கும் ஆதனம் வாங்கும்போது, கட்டிடத்தை நிர்மாணிப்பவர்களே தமது விற்றல் - வாங்கல் பத்திரத்தை (Agreement of Purchase and Slae) தமது சட்ட ஆலோசகர் மூலம் தயாரித்திருப்பார்கள். இந்தப் பத்திரம் பொதுவாக பத்து தொடக்கம் 20 பக்கங்கள் வரை சாதாரண மக்களால் புரிந்துகொள்ள முடியாதவாறு தயாரிக்கப்பட்டு இருக்கும். அவ்வளவு பெரிய சிக்கலான பத்திரம்.

பல பக்கங்கள் மிகச்சிறிய எழுத்தில் அச்சு செய்யப்பட்டு இருக்கும் என்பது அனேகர் கண்ட உண்மை. ஆதனம் விற்றல் வாங்கல் தொழில் என்னுடைய அனுபவத்தைக் கொண்டு புதிதாக நிர்மாணம் செய்யவிருக்கும் ஆதனம் வாங்குபவர்களிற்கு சில விடயங்கள் எழுதுகின்றேன்.

1. இந்தப் பத்திரத்தில் அனுபவமிக்க சட்ட வல்லுனரின் ஆலோசனை இன்றி ஒப்பமிடுவது சரியல்ல. சட்டவல்லுனரின் ஆலோசனையுடன் ஒப்பமிடுதல் எதிர்கால சிக்கல்களை இன்றே தீர்த்தவர்களாவோம். நாளைய சிக்கலிற்கு இன்றே தீர்வு கிடைத்துவிடும்.

2. Tarion (New home warranty) இற்குரிய செலவையும் யார் செலுத்த வேண்டும் என்பதனை அறிதல் வேண்டும்.

குறிப்பு - முன்பு New home warranty pro-gramme என இருந்தது இப்பொழுது TARION என பெயர் மாற்றப்பட்டுள்ளது. இவர்களே புதிய



வீடு, கூட்டகம் போன்றவற்றிற்குரிய Warranty Program இற்கு பொறுப்பாளராக இருக்கிறது.

3. சின்னச்சின்ன செலவுகள் பொதுவாக வரக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. இவற்றை நீக்கும்படி, கேட்டுக்கொள்வதன் மூலம் கட்டிட முதலாளி இதனை நீக்கி கொள்ள முடியும் (கேளுங்கள் தரப்படும்) பெரிய செலவுகளாக New Taxes or Levies பிற்பாடு சேர்த்துக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. இதன் அளவு ஆகக்கூடியது எவ்வளவாக இருக்கலாம் என்பதனை எழுத்தில் பெற்று கொள்வது நல்லது. அல்லது கட்டிட பொறுப்பாளரையே ஏற்றுக்கொள்ளும்படியும் கேட்டுக்கொள்ளலாம். அல்லது, மேலதிகமாக என்னென்ன செலவுகள் வரலாம் என்றும் அவை எவ்வளவு என்பதனையும் எழுதிப்பெற்றுக் கொள்ளமுடியும்.

4. சில பத்திரங்கள், நீங்கள் வாங்கவிருக்கும் வீட்டின் Floor Plan ஐ கொண்டு இருக்காது, இந்த சந்தர்ப்பத்தில் ஒப்பமிடுவதை முற்றாக தவிர்த்தல் வேண்டும். அழகான, கையால் வரையப்பட்ட படங்களை (Sketches) பார்த்து மயங்கிவிட வேண்டாம். இது பெரிய பிரச்சினை பின்னால் ஏற்படுத்தும்

5. பொதுவாக வீட்டின் (House) அல்லது கட்டிடத்தின் (Condominium) அளவு தரும்போது வெளிக்கரையிலிருந்து வெளிக்கரை மட்டுமே தரப்படும் என்பதனை மனதில் கொள்ள வேண்டும். எனவே நாம் பாவிக்கக்கூடிய ஆதனத்தின் அளவு சிறிதாக இருக்கும் என்பது தெளிவாக கொள்ளவேண்டும். வாங்கப்படும் ஆதனத்தின் அளவு Architect (கட்டிட கலைஞர்) இனாலே தரப்படுவது.

6. ஆதனத்தின் அளவு (வீடு மற்றும் கொண்டோ) கட்டிட பொறுப்பாளரால் மாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. ஆனால் Tarion இன் வரையறையின்படி 2% இற்கு மேலாக, ஆதனத்தின் அளவைக் குறைக்க கூடாது என்று கூறுகின்றது. ஆனால் இது ஒரு சட்டமாகாது. எனவே வீட்டின் அளவு குறைந்தால் எவ்வளவிற்கு குறையும் என்பதனை எழுத்தில் பெற்றுகொள்ள வேண்டும்.

7. பொதுவான பத்திரங்கள், வீட்டின் உட்பகுதியின் அமைப்பை மாற்றலாம் எனக்கூறுகின்றது. இதற்கு வாங்குபவரின் அனுமதி தேவை இல்லையென எழுதப்பட்டுள்ளது. எனவே இந்த பந்தியை நீக்குவது நல்லதாக இருக்கும்.

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

8. காணியின் அளவை (Lot size) மாற்றக்கூடாது என்பதனையும் சேர்த்தல் நல்லது.

9. Architect ((கட்டிடகலைஞர்) இன் படத்தின் பிரதியை தருமாறு கேட்பது நல்லது. எதிர்காலத்தில் செய்யப்படும் நிர்மாண சேவைகளிற்கு இந்த படம் உதவலாம்.

10. ஆதனம் விற்றல் வாங்கல் பத்திரங்களில் இன்றைய Furnace மற்றும் Airconditioner வாடகை பெற்றுக் கொள்வதாக பத்திரங்கள் ஆதனம் கட்டுபவரால் உருவாக்கப்படுகின்றது. இதில் கவனம் தேவை.



- தொடரும்-



# அரங்க நடிகருக்கு வேண்டிய சில தனியியல்புகள்

(கடந்த இதழ் தொடர்ச்சி - 3)

அவையஞ்சாமை அரங்க நடிகருக்கு இருக்க வேண்டிய இயல்புகளில் ஒன்று. மேடைக் கூச்சம் பொதுவாகப் புதிய நடிகருக்கு இருப்பது இயல்பு. மேடைப் பயம் உள்ளவர்களுக்கு நாடகம் தொடங்குவதற்கு முன்னதாக நெஞ்சு படபடத்தல், வியர்த்தல், நா வறளுதல் போன்ற சகுனங்கள் தோன்றுதல் கூடும். மேடைக் கூச்சம் வசனங்களையும் மறக்கச் செய்துவிடும். பலருக்கு இது தற்காலிகமானது. மேடையில் ஏறியதும் சொல்லாமற் கொள்ளாமல் அது மறைந்துவிடும். எனினும் இதனைப் போக்கு வதற்குப் பல வழிகள் உண்டு. சுவாசப் பயிற்சி அவற்றுட் பொதுவானது. செய்வதற்கும் எளிதானது. மனத்தை ஆற்றுப்படுத்தவும் பதற்றத்தைப் போக்கவும் பலவிதமான உடற் பயிற்சிகளும் உள்ளன.

பெரும் நெருக்கடிகளிலும் நிலைகுலையாத, பதற்றமில்லாத உறுதிப்பாடும் நிதானமும் நடிகருக்கு இருக்கவேண்டும். அரங்கத்திலே தோன்றியதும் பார்வையாளரைக் கட்டிப் போடும் ஆளுமையுள்ள நடிகர் சிறந்த கலைஞராவர்.

**கவிஞர் வி. கந்தவனம்**

இயக்குநர் சொல்வதை அல்லது செய்து காட்டுவதைக் கூர்ந்து கவனித்தல், சக நடிகர்களின் ஆற்றுகையை அவதானித்தல், அவர்களின் ஆலோசனைகளைச் செவிமடுத்தல், அனுபவங்களிலிருந்து பாடங்களைப் படித்து முன்னேறத் தக்க விவேகம், விமர்சனங்களைத் தனது வளர்ச்சிக்குச் சாதகமாக்கும் மனப் பக்குவம் போன்ற இயல்புகளும் நடிகருக்கு இன்றியமையாதவை.

எல்லாவற்றிலும் மேலாக பொறுமை என்னும் நகை நடிகருக்கு அணிகலனாதல் வேண்டும். நடிகர் பள்ளியில் இடம்பெறும் தொடர்ச்சியான களப்பயிற்சிகள், பிற பயிற்சிப் பட்டறைகள், ஒத்திகைகள் போன்றவற்றில் திரும்பத் திரும்ப ஒன்றைச் செய்து காட்ட வேண்டிய கட்டங்கள் ஏற்படும். அதாவது, பொறுமையைச் சோதிக்கும் அளவுக்குப் பயிற்சிகளும் விமர்சனங்களும் இடம்பெறும். அத்தகைய நிலைமைகளில் எல்லாம் நடிகர் மிகுந்த பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியவராவர்.

நடிகரின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் அடிப்படையாகவுள்ள காரணங்களில் தன்னம்பிக் கையும் துணிவும் பெரும் பங்கு வகிப்பன.

நடிப்புத் திறமையுடன் அரங்கம், ஒளி, ஒலி, காட்சியமைப்பு, ஒப்பனை முதலாய அரங்காடல் தொடர்பான தொழில் நுட்பங்கள் பற்றிய அறிவும் ஒரு நடிகரை முழுமையாக்கும்.

அரங்காடல் ஒரு குழு முயற்சி. அதனால் சக நடிகருடனும் தொழில்நுட்பக் கலைஞருடனும் ஒத்துழைத்து நாடகத்தைச் சிறப்புறச் செய்ய வேண்டிய பொறுப்புணர்வும் அர்ப்பணிப்பும் நடிகருக்கு வேண்டும்.

நடிகர்திலகம் சிவாஜி கணேசன் சிறுபராயத்தில் நாடகக் குழுவில் சேர்ந்து வேறு ஊர் ஒன்றில் தங்கியிருந்த காலத்தில் அவரது மூத்த சகோதரர் திருஞானசம்பந்தமூர்த்தி தவறி விட்டார். செய்தி கிடைத்ததும் வீட்டுக்குச் செல்ல விரும்பினார். ஆயினும் அவருக்கு அனுமதி கிடைக்கவில்லை. அதுபோல அவரது இரண்டாவது தமயனார் இறந்தபொழுதுங் கூட அவரால் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ள முடியவில்லை. நாடகத்தில் நடிக்கும் நடிகர்களில் ஒருவர்தானும் இல்லையெனில் நாடகத்தை மேடையேற்ற முடியாது. அவ்வளவுக்குப் பொறுப்பான தொழில் நடிப்புத் தொழில்.

கடமையுணர்வும் மனக்கட்டுப்பாடும் எவ்வளவுக்கு வேண்டுமோ அவ்வளவுக்குச் சக நடிகருடன்



நட்புணர்வை வளர்த்தலும் வேண்டும். கூட நடிக்கும் நடிகருடன் குடும்பத்து உறவினர்போல அன்பாகப் பழகி, அவர்களது கருத்துரைகளை மதித்து, மறுப்புத் தெரிவிக்க வேண்டின் அதனையும் அவர்களது உள்ளம் புண்படாத வகையிற் செய்து, நல்லுறவை வளர்த்து ஒற்றுமை பேணும் நடிகர் எல்லோராலும் மதிக்கப்படுவார். மற்றவர்களுக்கும், குறிப்பாக இளம் நடிகருக்கும் அவர் ஓர் உதாரண மாண்பினராக விளங்குவார்.

ஒழுக்கம் எல்லோருக்குமே விழுப்பந் தருவது. அதனைப் பேணுவதில் நடிகரும் அதிக கவனம் எடுத்தல் வேண்டும். நடிப்பு கலைகளிலே உன்னதமானது. அதன் உயர்வுக்குப் பங்கம் ஏற்படாத வகையில் நடிகர்தம் வாழ்க்கையை நடத்துவதோடு அதனை மேலும் வளர்க்கவும் உழைத்தல் வேண்டும்.


Gordon Craig(1872-1966) என்பவர் ஒரு பெரிய நடிகர் அரங்க இயக்குநர் ஐரோப்பா எங்கணும் நாடகத்தைக் கற்பித்து அதன் வளர்ச்சிக்குத் தன் வாழ்நாளையே அர்ப்பணித்த அரங்கக் குரு. அவரது கருத்துக்கள் பல மேலைநாட்டு நடிப்புக் கல்லூரிகளில் அடிக்கடி பேசப்பட்டும் பின்பற்றப்பட்டும் வருகின்றன. அவற்றுள் ஒன்று இது:

*"Acting is easy for no one, and training alone cannot solve any of the most important problems."* .

*- தொடரும் ...*




DEBT & MORTGAGE SOLUTIONS !!



- கடன் தொல்லையா?
- கடன்காரர்களின் தொந்தரவா?
- Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

**கவலைப்படாதீர்கள்!**

அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது Mortgage பெற அழையுங்கள்

**ராஜ்**

416-835-6695

Call : 'RAJ'

for all kinds of Debt & Mortgage Solution

Lendingtree.ca

MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM / NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537 / 416-291-3022

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

# தலித் படும் பாடு - 11

சென்னை உயர்நீதி மன்றம் சென்றுள்ள வழக்கு

இம்முறை திருமாவளவன் எல்லாக் கட்சிகளையும் கூட்டி இதற்கு ஒரு வழி காணும் முயற்சியில் இறங்கினார். பெரிய கட்சிகள் ஏதும் அக்கறை காட்டவில்லை. அவர்கள் கும்மிடிப்பூண்டி, காஞ்சிபுரம் இடைத்தேர்தலில் ஆழ்ந்திருப்பதாக காரணம் சொன்னார்கள். மூவேந்தர் அணி என்று சொல்லப்படும் கட்சி (இதுவும் சாதிக் கட்சி தான்) டாக்டர் சேதுராமன் இதில் ஆர்வம் காட்டினார். அவர் தி.மு.க அணியைச் சேர்ந்தவர். இருப்பினும் தி.மு.க தலை காட்டவில்லை. சில சின்னச் சின்ன முஸ்லீம் கட்சியினர் கலந்து கொண்டனர். இந்த பகுதியில் இழப்பதற்கு ஏதும் இல்லாத பாட்டாளி மக்கள் கட்சியினர் தாமும் கலந்து கொண்டதாக பேர் செய்தனர். ஆனால் திருமாவளவனைத் தவிர வேறு யாரும் இக்கிராமங்களில் தேர்தல் வேலைக்கு வரவில்லை. ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு தம் வரவைப் பதிவு செய்து கொண்டதோடு சரி.

கீரிப்பட்டியில் முன்னர் வேட்பாளராக நின்று தோற்ற பூங்கொடியே இம்முறையும் விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் நிறுத்தப்பட்டார். வழக்கம்போல், தேவர் சமூகத்தினர் அழகு மலை என்ற தலித்தை தம் பொம்மை வேட்பாளராக நிறுத்தினர். பாப்பாப் பட்டியில், தேவர் பெரும்பான்மை, நரசிங்கம் என்பவரை தன் பொம்மை வேட்பாளராக நிறுத்தினர். மற்ற இரு கிராமங்களிலும் யாரும் வேட்பாளரே இல்லாததால் தேர்தலும் இல்லை. பொம்மை வேட்பாளருக்குத் தேவையும் இல்லாது போயிற்று.

## வெங்கட் சாமிநாதன்

கீரிப்பட்டியில் வெற்றி பெற்றவர் பொம்மை வேட்பாளர் அழகு மலை தான். அவர் பெற்ற வாக்குகள் 487. அவர் வெற்றி அறிவிக்கப்பட்ட அடுத்த சில நிமிடங்களில் தன் இராஜினாமா கடிதத்தை, தேர்தல் அதிகாரியிடம் சமர்ப்பித்தார். இது வழக்கமாக நடக்கும் கூத்து தான். இவரை எதிர்த்து நிறுத்தப்பட்ட பூங்கொடி பெற்ற வாக்குகள் 29. பயங்கரமான தோல்விதான். ஆனாலும் பெரும்பான்மையினருக்கு அவர்கள் அதிகாரத்தை மீறி பூங்கொடிக்கு முந்திய வருடம் கிடைத்த மூன்று வாக்குகள் முன்னைவிட பத்து மடங்கு அதிகமாகி 29 வாக்குகள் கிடைத்து விட்டதே. அது அவர்களை அவமதித்த செயலாகிவிட்டது. பூங்கொடிக்கு வாக்களித்த 29 பேர் கொண்ட 15 குடும்பங்களை, கிராமத்திலிருந்து ஒதுக்கிவைத்தனர். அவர்களுக்கு தேவையான பால், பருப்பு, அரிசி ஏதும் யாரும் விற்கக்கூடாது. வியாபாரிகள் அனைவரும் தேவர் சமூகத்தினர். எந்த வேலைக்கும் அவர்கள் எடுத்துக் கொள்ளப்படமாட்டார்கள். இந்த கட்டளையை மீறுபவருக்கு தண்டனை ரூபாய் 1000 என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முன் வருடங்களில் இதற்குப் பயந்த தலித் மக்கள் இப்போது தமக்கு வேண்டிய பொருட்களை அருகிலிருக்கும் உசிலம்பட்டி கிராமத்துக்குச் சென்று வாங்கிக் கொள்கின்றனர். பெரும்பாலும் தலித் மக்கள் நிலங்களில் கூலி வேலை செய்பவர்கள் தான். பெரும்பான்மை தேவர் அப்படியொன்றும் செல்வச் செழிப்பில் திளைப்பவர் இல்லையென்றாலும், கடந்த கால நிலப்பிரபுத்துவ சமுதாயப் பார்வைகள் மதிப்புகளிலிருந்து இன்னும் விடுபடாதவர்கள். மேலும் அரசியல் பலம் கொண்ட அரசாளும் கட்சி தம் கட்சி என்ற கர்வத்தில் மிதப்பவர்கள். எதிர் கட்சியான தி.மு.க வும் தேவர் வாக்குகளைப் பகைத்துக் கொள்ளக்கூடாது என்று 17 வருடங்கள் மௌனமாக இருப்பதும் தைரியம் தரும் விசயம்.

தேவர்கள் இக்கிராமங்களில் தான் பெரும்பான்மையினர் என்பதில்லை. அவர்கள் தென் மாவட்டங்களில் பெரும்பான்மையினராக உள்ள வர்கள். மற்ற தலித்துக்களுக்காக ஒதுக்கப் பட்டுள்ள தொகுதிகளில், ஒரு தலித் பொம்மை வேட்பாளராகவே நிறுத்தப்பட்டு வெற்றி பெற்று பதவியில் உட்கார்ந்த போதிலும் அவர் உட்கார வைக்கப் பட்டவராகவே நடத்தப் படுவார். அதிகாரம் முழுவதும் பெரும்பான்மையினர் விருப்பப்படியே நடக்கும். பதவி பெற்றவர் "அப்பிடியே செய்துடுங்க சாமி" என்று ஒப்புதல் அளிப்பார். இது தான் பெண்கள் பஞ்சாயத்துத் தலைவராகும்போதும் நடப்பது. பின்னிருந்து கணவர் ஆட்சி பரிபாலனம் செய்வார். ஆனால், கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி கிராமத்து தேவர் சமூகத்திற்கு இந்த அளவு ஒரு பொம்மையை நாற்காலியில் உட்காரவைப்பதற்குக் கூட மனம் ஒப்பவில்லை என்பது தான் காரணம்.

சில எதிர்பாராத விடயங்கள் நடந்து விட்டன. பாப்பாப் பட்டியில் பொம்மை வேட்பாளராக நின்று வெற்றி பெற்ற நரசிங்கம் என்பவர் சொன்னபடி கேட்பவராக இல்லை. அவர் ராஜினாமா செய்ய மறுத்தார். எப்படி நிகழ்ந்தது என்று யாருக்கும் காரணம் புரியாத வகையில் அவர் ரத்தம் கக்கி இறந்து விடுகிறார். எப்படி? இயற்கை மரணமா? கொலையா? இப்போது அங்கு என்ன செய்வது என்று யாருக்கும் புரியவில்லை. கீரிப்பட்டியில் வெற்றி பெற்று பின்னர் தன் இராஜினாமா செய்த அழகு மலை, மக்களின் விருப்பத்திற் கிணங்கவேதான் இராஜினாமா செய்ததாக கூறுகிறார். தோல்வியடைந்த பூங்கொடி, சென்னை உயர்நீதி மன்றத்திற்குத் தன் வழக்கை எடுத்துச் சென்றுள்ளார். அவர் கோரிக்கைகள்:

1. தமிழ் நாடு பஞ்சாயத்துச் சட்டத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர் இராஜினாமா செய்வதற்கு இடமில்லை. அவர் மீது நம்பிக்கை இல்லையென்று பதவி நீக்கப்படுவதற்கே இடமுண்டு.

2. அவர் தன் இராஜினாமாவை மாவட்ட ஆட்சியரிடம் தந்திருக்க வேண்டுமே தவிர, தேர்தல் அதிகாரியிடம் அல்ல.

3. தமிழ் நாடு பஞ்சாயத்துச் சட்டம் அமுலுக்கு வந்த 1996 லிருந்து தலித்துகள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகுதியில் தேர்தலுக்கு நிற்பதற்கும், பதவி ஏற்பதற்கும் எதிராகவே பெரும்பான்மையினர் செயல் பட்டு வந்துள்ளனர். அவர்களது 19 வருடங்களாக தொடர்ந்துள்ள இச்செய்கை, தலித்துகளுக்கு எதிரான சட்ட விரோத செய்கை. அவர்களுக்கு எதிராக SC/ST atrocities Prevention Act-ன் படி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

4. இது நாள் வரை நடந்துள்ளது போல தமிழக அரசு இம்மாதிரி தேர்தல் முடக்கப்பட்டுள்ள ஊராட்சி மன்றங்களுக்கு சிறப்பு அதிகாரி ஒருவரை நியமித்து சட்ட விரோத செயலுடன் சமரசம் செய்துகொள்வது தடுக்கப் படவேண்டும். சிறப்பு அதிகாரி, அதிகாரி ஒருவரை நியமிப்பதிலிருந்து அரசு தடுக்கப்பட வேண்டும். இப்படியாக பல கோரிக்கைகள் அம்மனுவில் உள்ளன.



இப்போது கீரிப்பட்டியில் ஊர் பிரகடம் செய்யப்பட்டுள்ள தலித் மக்கள், எந்த சமரச நடவடிக்கை மூலமும், பெரும்பான்மை சமூகத்தோடு ஒத்து வாழ மறுக்கின்றனர். அவர்கள் தமக்கு வேலை வாய்ப்பும், அவர்களுக்கு என பள்ளிக்கூடம், பலசரக்குக் கடை திறக்க பண உதவி, போக்கு வரத்து வசதிகள், அவர்களுக்கு என தனி பஸ் நிறுத்தங்கள் என பல கோரிக்கைகளை எழுப்பியுள்ளனர்.

இப்போது, புதிய தமிழக கட்சித் தலைவர், டாக்டர் கிருஸ்ணசாமி, இக்கிராமங்களைப் பார்வையிட்டுச் சென்றுள்ளார். கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் ஒருவர், எம்.ஜி.ஆர் காலத்தில், பஞ்சாயத்துத் தேர்தல்களில் கட்சிகள் சார்பில் போட்டியிடக்கூடாது என்று சட்டம் வந்தபோது தம் கட்சி அதை எதிர்த்ததாகவும், அந்த சட்டம் அமுலாக்கப் பட்டிருந்தால், கட்சிகள் சார்பில் நடக்கும் போட்டியில், கட்சி முன்னின்று, சாதி அபிமானம் பின்னொதுங்கியிருக்கும் என்றும், ஆகவே தவறு அன்றே நடந்து விட்டது என்று கருத்து தெரிவித்து இருக்கிறார்.

கம்யூனிஸ்டுகளின் விஞ்ஞான பூர்வமான என்றுமே வென்றெடுக்க படமுடியாத மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் சித்தாந்த ஆராய்வுகளும் முடிவுகளும் இந்த இலட்சணத்தில் தான் இருக்கும். ஒரு சின்ன கிராமத்தில் உள்ள ஒரு சில நூறுகளில் அடங்கிப் போகும் ஒரு வெகுவாக பின் தங்கிய வகுப்பினரின் சாதி மேலாண்மையை எதிர்த்து ஒரு வார்த்தை சொல்ல பயந்து சாகும், 1916லிருந்தே சமூக நீதியையே தம் இலட்சியமாகக் கொண்டு போராடுவதாக சொல்லிக் கொள்ளும் கட்சிகளே சாதி அபிமானத்திற்கு பயந்து களம் விட்டோடும் காட்சியை இந்த நான்கு கிராமங்களிலும் 19 வருடங்களாக பார்த்தும், அப்போதெல்லாம் வாய்திறக்காத கம்யூனிஸ்ட் கட்சி தலைவர், திருமாவளவன் முன் செல்லப் பின் தொடரும் இவர் இப்போது இப்பிரச்சினையில் இடை புகுந்து திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

இக் கேலிக்கூத்தாட்டம் ஏன்? சமூக நீதியிலேயே பிறந்து புரள்வதாக முரசு கொட்டும் கட்சிகளின் இக்கபட நாடகம் ஏன்? ஏன் தமிழ் நாட்டின் எந்த அரசியல் கட்சியும் இக்காட்சிகளைக் கண்டும் கண்மூடிக்கொள்கின்றன. சாதி உணர்வை ஒழித்து விட்டதாக சொல்லிக்கொள்ளும் தலைமைகளின் இலட்சணங்கள் என்ன? அவற்றின் வரலாறு, அவர்கள் சொல்லிக் கொள்வது போல சமூக நீதியிலும், சமத்துவத்திலும், சாதி ஒழிப்பிலும் தான் தொடங்குவதா? என்ற கேள்விகள் எழுகின்றன. அவற்றை இவர்கள் வாய்மொழிந்த ஆவணங்களிலிருந்தே அடுத்துப் பார்ப்போம்.




WEB CREATION

அதிக செலவில்லாமல் சிறப்பான இணைய தளத்தை உங்கள் வியாபாரத்துக்கு என அமைக்க வேண்டுமா? இலவச ஆலோசனை பெற இன்றே, இப்போதே அழையுங்கள் M. Karthik

தொலைபேசி எண் - 647 519 0623



YARL WINDOW

BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS

- Venetian Blinds
- Pleated Shades
- Vertical Blinds
- Cellular Shades
- Roller Shades

FREE ESTIMATE




உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்


விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733

416.806.5397

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

The Mortgage Alliance company of Canada





வீடு வாங்குவது நீங்கள்
பணம் ஒழுங்கு செய்வது நான்

உங்கள் இல்லத்தை 5% முற்பணத்துடன் கொள்வனவு செய்வதற்கு வங்கி வட்டி வீதத்தைவிட குறைவாக வீடு மற்றும் வியாபார 1ஆவது, 2ஆவது, 3ஆவது அடமான கடன் பெற நாடுங்கள் - காந்தன்

Tel.: 416.291.3997
Cell: 416.895.4283

குறைந்தவட்டி நிறைந்த பலன்

யோகா சோதிடம்

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361

மேலைத் தேசத்தில்

கீழைத் தேசத்து வாசனைகள்...

# Niru BRAND®

## எமது புதிய அறிமுகங்கள்




**Improted & Marketed By:**

**NIRU ENTERPRISES INC.**
40 Minuk Acres Scarborough.
Ontario. Canada, M1E 4Y6
Tel: 416-750-1976
Fax: 416-750-8779
www.niru.com

**NIRU(EUROPE) LTD.**
Unit 11, Mitcham Insustrial Estate,
85, Streatham Road, Mitcham
Surrey, CR4 2AP. U.K
Tel: +44 208 640 8228
Fax: +44 208 640 8312

# நோய்களுக்குரிய காப்புறுதி ஒப்பந்தங்கள்

**கடுமையான நோய்களுக் குரிய காப்புறுதி ஒப்பந்தத்தில் (CRITICAL ILLNESS INSURANCE) சேர்ந்துள்ள ஒருவர் தமது நட்ட ஈட்டினை பாதிக்கப் பட்ட நேரம் பெற விரும்பினால் அதனை எவ்வாறு பெறுவது? கம்பனி எப்படி இந்த நட்டஈடு கோரிக்கையினை கையாளும்?**

ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்ட மாதிரியான நோய்களுக்கு உட்பட்ட ஒருவர் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட நட்டஈடு தொகையினை பெற விரும்பினால் அவ்நோய் தொடர்பாக மருத்துவ அத்தாட்சி மூலம் உறுதி செய்யபட்டு முப்பது நாட்களின் பின்பே நட்ட ஈடு வழங்கப்படும். அதாவது இம் முப்பது நாட்களுக்கு இடையில் எதிர்பாராதவிதமாக உயிர் இழப்பு நடந்தால் குறிப்பிடப்பட்ட தொகை நட்டஈடு கிடையாது. மாதா மாதம் செலுத்திய பணம் மட்டும் குடும்பத்தவர் களுக்கு திருப்பி வழங்கப்படும்.

அதாவது நோய் வாய்பட்ட ஒருவர் ஆக குறைந்தது முப்பது நாட்களேனும் தொடர்ந்து இக் கடுமையான நோயின் தாக்கத்தின் பின்பும் உயிர் வாழ்ந்தால் மட்டுமே நட்ட ஈட்டினை பெற தகுதியுடையவர் என்பது இக் காப்புறுதி ஒப்பந்தத்தின் பிரதான சட்ட விதியாகும்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட ஒருவர் நேரடியாகவோ அல்லது இன்னொருவர் மூலமோ கம்பனிக்கோ அல்லது காப்புறுதி முகவருக்கோ அறிவிக்கும் போது விண்ணப்ப பத்திரங்களை வழங்கி, அதனை பூரணப்படுத்தி கம்பனிக்கு சமர்பிக்க வேண்டிய ஒழுங்குகளை செய்வார்கள். நட்டஈடு கோரும் விண்ணப்பபடிவங்களை மின்கணணி தொடர்மைய மூலமோ அல்லது நேரடியாகவோ எவரும் பெற்று கொள்ளலாம். இவ் விண்ணப்ப படிவத்துடன் மேலதிக மருத்துவ அத்தாட்சி தகவல்களை சேகரிக்கும் விண்ணப்ப படிவத்தினை வழங்கி கம்பனி மேலும் தகவல்களை சேகரிப்பதுடன், கம்பனி பிரதிநிதி நேரடியாகவும் சென்று நோயாளியினை பார்த்து தகவல்கள் எடுப்பதுடன், சிகிச்சை பெற்ற வைத்திய நிலையம், மருத்துவர்கள் யாவரிடமும் இருந்து முழுமையான தகவல்களை பெற்று கொள்வார் கள். இவ் தகவல்களின் அடிப்படை யில் புலனாய்வுகளை தொடர்ந்து முடித்து யாவும் திருப்தியாக இருந்தால் நோயாளியின் பெயரில் நட்டஈட்டினை வழங்குவார்கள்.

ஆனால் இங்கு நோயினால் பாதிக்கப்பட்ட


சிவ. பஞ்சலிங்கம் B. Com,

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


ஒருவர், நட்டஈடு கோரும் ஒப்பந்தத்தினுள் உள்ள நோய்க்குரிய வரைவிலக்கணத்தினுள் நோயின் தன்மை இருக்க வேண்டும். உதாரணமாக சிறுநீரகம் செயல்படாத நிலைமை என்பது, இரு சிறுநீரகமும் செயல்படாத நிலையில் குருதி சுத்திகரிப்பு (Dialysis) சிகிச்சைக்கு செல்லும் நிலைமையில் நோயாளியாக இருக்க வேண்டும். கண்பார்வை இழந்தவராக இருந்தால் இரு கண் பார்வையும் இழந்தவர் என்ற நிலையில் இருக்க வேண்டும். (எனவே தான் இவ் ஒப்பந்தத்தினுள் சேர்ந்து கொள்பவர்கள் முதலில் ஒப்பந்தங்களின் வரைவிலக்கணங்களை தெட்ட தெளிவாக புரிந்து கெள்ள வேண்டும்)

**"குழுவான காப்புறுதி திட்டம்" (Group Insurance) என்றால் என்ன?**

தனி ஒரு நபர் என்று இல்லாது பல பேர் சேர்ந்த ஒரு குழுவினர் தங்களுக்கு ஏற்படப்போகும் ஆபத்துக்கள் என நினைக்கும் "உயிர் இழப்பு", நோய்களினால் உடல் இயங்க முடியாத நிலைமை (Disability), உட்பட சகல விதமான மருத்துவ தேவைகளுக்காக செய்து கொள்ளும் ஒரு வகையான காப்புறுதி ஒப்பந்தமே ஆங்கிலத்தில் "Group Insurance" என குறிப்பிட்டு வருவதுண்டு.

உதாரணமாக ஒரு தொழில் இடத்தில் வேலை செய்யும் தொழில் புரிவோர் குழு, ஒரு தொழிற் சங்கங்களில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் குழு, வங்கிகளில் கடன் பெற்றோர் குழு என இப்படியான பல பேர் சேர்ந்த குழு பல வகைகளில் அமையும். இதில் ஒவ்வொரு குழுவினருக்கும் என இக்காப்புறுதி ஒப்பந்தங்க ளில் சில சட்ட விதிகள் உண்டு. உதாரணமாக தொழில் இடங்களில் பணி புரிவோர் முழு நேரமாக வேலை செய்பவராக இருத்தல் வேண்டும். தொழிலை விட்டு விலகும் போது இக்காப்புறுதி ஒப்பந்தத்தில் இருந்தும் விலகி கொள்கின்றார். இதற்குரிய மாத கட்டுப் பணத்தினை தொழில் நிறுவனமும், ஊழியரும் சேர்ந்து செலுத்துகின்றனர். பொதுவாக இக்குழு என்பது குறைந்தது பத்துப்பேருக்கு குறையாமல் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்குழுவின் ஒப்பந்தத்தில் இருப்பவர்கள் யாவருக்கும் இக்காப்புறுதி ஒப்பந்தம் தொடர்பான பத்திரம் வழங்கப்படும். அதில் காப்புறுதி நிறுவனத்தின் பெயர், அடிப்படை ஒப்பந்தத்தின் அடையாள இலக்கம், காப்புறுதியின் தொகை, ஒப்பந்தத்தில் இழப்பீட்டு நிவராணங்களை பெற உரித்துடையவர் பெயர் விபரங்கள் மற்றும் இது தொடர்பான சட்ட விபரங்கள் யாவும் அடங்கும். இக்குழுவான காப்புறுதி ஒப்பந்தத்தினால் சேர்பவருக்கு



பின்வரும் வழிகளில் அனுகூலங்கள் உண்டு.

- குறைந்த மாத கட்டு பணம்.
- சேரும் போது உள்ள மருத்துவ புலனாய்வு களின் நெருக்கடி என்பது தனியாக சேரும்போது இருப்பதனை விட குறைவாகவே இருக்கும்.
- சாதாரணமாக தனியாக பெற்று கொள்ளும் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் சேர முடியாத அளவுக்கு உடல்நிலைமை பாதிக்கப்பட்டவர்கள் முழுநேரமாக, மும்முரமாக தொழில் புரிபவராக இருந்தால் இதில் சேரும் வாய்ப்பு உண்டு.
- தொழில் நிறுவனமும் ஒரு பகுதி மாதக் கட்டுப்பணம் செலுத்துவார்கள்.
- குறிப்பாக பல்சிகிச்சைக் காப்புறுதி (Dental Coverage) மருந்துகளுக்கான காப்புறுதி [Drug Plan] போன்றவற்றுக்கு இக்காப்புறுதி மிகவும் மலிவானதாகும்.

மேற்குறிப்பிட்ட அனுகூலங்கள் பல இதில் இருந்தாலும், ஒருவர் என்றோ ஒரு நாள் தொழிலை விட்டு விலகும்போது அல்லது ஓய்வு பெறும்போது, அதாவது அந்த குழுவினை விட்டு முற்றாக விலகும் சந்தர்ப்பத்தில் முற்றாக காப்புறுதி ஒப்பந்தத்தில் இருந்தும் விலகி கொள்வதால் தனியாகவே நிரந்தரமான சில காப்புறுதி ஒப்பந்தங்களை ஆரோக்கியமாக இருக்கும் வயது குறைந்த காலத்தில் பெற்று வைத்திருப்பது மிக நல்லது என கனடாவின் காப்புறுதி நிதியியல் நிபுணர்கள் தங்கள் அறிக்கைகளில் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டு உள்ளனர்.




# SRI PARADISE Catering & Take -out

416.269.4509

292 Markham Road, Scarborough, ON



திங்கள் - செவ்வாய்
சிங்கப்பூர் நூடில்ஸ்
(கோழி மரக்கறிகளுடன்)
$2.99

புதன் - வியாழன்
கொத்துரொட்டி
ஆடு மாடு கோழி
$2.99

வெள்ளி மரக்கறிச்சாப்பாடு 5
மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை
$4.50

Daily special
மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி
சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு
$2.99

Dinner Special
சிங்கப்பூர் நூடில்ஸ்
கோழி மரக்கறிகளுடன்
$2.99

சனி - ஞாயிறு Lunch Special வாழையிலைச் சாப்பாடு
கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு, மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, கட்டைச் சம்பல், மீன் பொரியல், கட்லட், உருளைக் கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல்
$5.99



பரடைசின் Special
புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad
$2.99

Dinner Special
மசாலா தோசை, சாம்பாறு, சம்பல்
$1.99

Daily Special
பரடைசின் Special
புரியாணி சிக்கன்கறி சலாட் முட்டை
$2.99

*Sri Paradiase Specials*

- 10LB அவித்த கோதுமை மா - $3.99
- ரொட்டி .50¢
- விசேட வைபவங்களுக்குத் தேவையான 6 வகையான Combo package. 20 பேர் கொண்ட சபைக்கு $99 மட்டுமே.
- மாதத்திற்குரிய சாப்பாடு - 1 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $99.00
  2 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $150.00

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

25 மேல் கொள்வனவு செய்வோருக்கு 10LB அவித்த மா இலவசம்

# தமிழ் மொழி வாரம் சிறப்புப் பக்கம்

**யூன் 26 . 2005 - யூலை 02 . 2005**

எமது சமூகத்தின் உயிர்ப்பான இருப்பு எமது மொழியையும் எமது கலை, இலக்கியங்கள், பண்பாட்டையும் பேணி வளர்ப்பதிலேயே தங்கியுள்ளது. புலம் பெயர்ந்தாலும் மொழிப் புலமையை வளர்த்துக் கொள்கிற சமூகங்கள் வரலாற்றை வெற்றி கொள்கின்றன. தமிழ்மொழி கற்றலின் அவசியத்தையும் தமிழ்மொழியின் சிறப்பையும் வலியுறுத்த வும் தமிழுக்கு வளத்தையும் புதுமையை யும் சேர்க்கவும் தமிழ்மொழி வளர்ச்சியை முன்னெடுப்பதற்காகத் தமிழ்மொழி வாரம் கொண்டாடப்படுகிறது.

"தமிழின் வாழ்வே தமிழர் வாழ்வு"

## வாகனத்திருட்டைத் தடுக்க சில வழிமுறைகள்

1. எப்பொழுதும் ஜன்னல் கண்ணாடிகளை உயர்த்தி கதவைப் பூட்டித் திறப்புக்களை எடுக்க மறக்கலாகாது.
2. வாகனப் பத்திரத்தையும், காப்புறுதிப் பத்திரத்தையும் எப்பொழுதும் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.
3. ஒரு பொழுதும் பெறுமதியான பொருட்களையோ, பெறுமதியான பொருள்போல் தோற்றமளிக்கும் பொருட்களையோ வாகனத்தில் தெரியும்படியாக விட்டுச் செல்லுதல் கூடாது.
4. எப்பொழுதும் மறைவற்ற, மக்கள் நடமாட்டம் கூடிய பகுதிகளில் வாகனத்தை நிறுத்துவதற்கு முயற்சிக்கவும்.
5. இரவில் வாகனத்தை நிறுத்தும்போது பாதுகாப்பாக இருந்தாலும் வாகனத்தின் கதவுகளைப் பூட்ட மறக்க கூடாது.
6. வாகனத்தை தூக்கிச் செல்வதைத் தடுப்பதற்காக சக்கரத்தை நேராக விட்டு அவச-ரகால பிரேக்கைப் போட்டு விடவும்.
7. சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகளுடன் யாரும் தென்பட்டால் பொலிசாருக்குத் தகவல்கொடுக்கவும்.
8. பாதுகாப்பளிக்கக்கூடிய அல்லது தாமதிக்கக்கூடிய பாதுகாப்பு முறைகளுக்குரிய கருவிகளை வாகனத்தில் பொருத்துதல் நன்மை தரும்.
9. முக்கிய உதிரிப்பாகத்தில் அடையாளங்கள் வைத்திருப்பது பாதுகாப்பளிக்கும்.
10. உங்களுடைய பெயர், முகவரி அடையாளங்களைக் காரின் மறைவான இடங்களில் வைத்தல் நலம்.

# இரட்டைப் பிறவி

தாயின் கருவிலேயே, இரட்டையாக, உருவும் அதன் நிழலும் போல் ஒன்றுபட்டு வளர்ந்து ஒட்டிப் பிறக்கும் இரட்டைக் குழந்தைகளை 'ஸயாமிஸ் இரட்டையர்' என்பர். இத்தகைய இரட்டையர்களைத் தமிழ் இலக்கியம் 'கவை மகவு' என்று அழைக்கிறது. குறுந்தொகை 324-ஆம் பாடல்.

முதலைகள், நஞ்சரவுகள் மிகுந்த கானல் வழி, நீந்தி வருகிறான் தலைமகன் - தன் காதலியைப் பார்க்க! அவ்வளவு அன்பு, காதல்! அவ்வழியில் உள்ள இடர்களை உணர்ந்த தலைவி, தலைவன் நலன் கருதி அச்சப்படுகிறாள். இந்த இரண்டு நிலைகளையும் உணர்ந்த தோழி, காதலனைக் காண வாராதே என்று தடுக்கவும் முடியாமல், தலைவியின் அச்சத்தைப் போக்கவும் முடியாமல் இன்னல்படுகிறாள். தோழிபடும் இடருக்கு, இரட்டைப் பிள்ளைகளை உவமையாக்குகிறான். கவிஞன். இந்த இரட்டைகளில் (கவைமக) ஒன்று நஞ்சுண்டாலும், இரண்டு குழந்தை களையும் பாதிக்குமே என்று பெற்றவள் இரண்டுக்கும் ஒருங்கே மருந்தளித்து நஞ்சு முறித்தல் போல், தலைவன் - தலைவி இருவரும் நலம் பெற, தலைவன் - தலைவியை விரைவில் மணந்து கொள்ளுதலே சிறந்த வழி என்று தோழி உணர்த்துகிறாள்.

## பக்தி

ரமண பகவானைத் தரிசிக்க பலர் வந்தனர். அவர்களில் சிலர் 'எங்களுக்குப் பக்தியை அருளுங்கள்; முக்தியைத் தாருங்கள்' என்று வேண்டினர். பகவான் மௌனம் காத்தார். பக்தர்கள் புறப்பட்டுப் போனதும், பகவான், புன்னகையுடன், 'அதைக் கொடுங்கள் , இதைக் கொடுங்கள்' என்று இவர்கள் கேட்கிறார்களே, பக்தியும் முக்தியும் என்ன விலை பொருளா, எடுத்து வழங்க? தங்களையே இறைவனுக்கு அர்பணித்துவிடவேண்டும், இறைவன்தான் அவற்றை வழங்கவேண்டும் - தங்களை வழங்காமல் ஞானம் எப்படிப் பெறமுடியும்? என்று கூறியருளினார் பகவான் ரமணர்.

கொடுங்கால் முதலைக் கோள்வல்  
ஏற்றை வழி வழக்கு அறுக்கும்  
கானவம் பெருந்துறை  
இன்மீன் இருங்கழி நீந்தி நீநின்  
நயனுடை மையின் வருதி இவள்தன்  
மடனுடை மையின் உயங்கும் யான்  
அது  
கவைமக நஞ்சுஉண் டாஆங்கு  
அஞ்சுவல் பெரும என்நெஞ்சத் தானே.

# வளைந்து போன வீர வாள்......

02ஆம் பக்கத் தொடர்ச்சி

இதிலை படுங்கோ. சாரத்தாலை போர்த்துக் கொள்ளுங்கோ

எனக்கும் தம்பிக்கும் நித்திரை வரவில்லை. மாமாவி-ன் குறட்டை சத்தம் கேட்டதும் தம்பி துள்ளி எழுந்தான். அந்த இருட்டுக்குள் பரபரப்பாக எதையோ தேடினான்.

கள்ள நாய். இவன் மாமாவின் காசை ஏதும் களவெடுக்கின்றான் போல. எனக்கு ஆத்திரம் வந்தது. மாமாவை எழுப்பிச் சொல்லுவமோ என்று நான் நினைக்க, மறுபடியும் என்னருகில் வந்து படுத்தான்.

மெல்ல என்னை சுரண்டினான். நான் ஆத்திரத்தில் பேசாமலே இருந்தேன்.

ரேடியோ இருக்கிறது என்று கூறினான். நான் திரும்பவே இல்லை. ஆனால் மனதுக்கு சந்தோசமாக இருந்தது. நின்மதியாக நித்திரை வந்தது.

பரபரப்பாக காலையில் எழுந்த மாமா இரண்டுபேரும் வெளிக்கிடுங்கோ என்று அவசரப்படுத்தினார். எங்கு எதற்கு என்ற எந்த விபரமும் மாமா வழமையாக கூறுவதில்லை.

பாணிபோட்ட போயிலை மூட்டையில் இருந்து நல்லதாய் இரண்டு போயிலை கட்டுகளைத் தேடி எடுத்துக் கொண்டார். யாரையோ முக்கியமாக சந்திக்கப்போகின்றார் என்று நினைத்தேன்.

அந்த குவாட்டசை விட்டு வெளியேறி இன்னொரு குச்சு ஒழுங்கை வழியாக சிறிது தூரம் நடந்தோம். ஒரு சிறு கல் வீட்டுக்கு முன் நின்றார். எங்கள் இருவரையும் பார்த்தார்.

ஒரு பிரச்சனையும் இல்லாமல் அமைதியாய் இருக்கவேண்டும் என்று மிரட்டல் தொனியில் கூறினார். இப்படியான சந்தர்ப்பங்களில் என்னுடைய தலை எனக்கும் தெரியாமல் தானாகவே ஆடிவிடும். தம்பி யோசித்துத் தான் ஆட்டுவான்.

பின்னாலேயே வாங்கோ மூங்கிலால் செய்த படலையை திறந்து கொண்டு மாமா அந்த வீட்டு வளவுக்குள் காலடி வைத்தார். எனக்கு ஒரே பரபரப்பாக இருந்தது. சிங்கள மாமியைத் தான் சந்திக்கப் போகின்றோமோ?

வீட்டுக் கதவைத்தட்ட ஒரு பெண்மணி கதவைத்திறந்தாள். அழகான பெண்மணிதான். மாமியா ஏற்பதற்கு எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை நான் தயார்.

நோனா சிங்களத்தில் மாமா கூறினார். ஓ! யாப்பண இருந்து வந்ததா?........ உள்ளுக்கு வந்து கொஞ்சம் இருங்க.

அந்தப் பெண் உள்ளே சென்று விட்டார். நானும் தம்பியும் ஒருவரை ஒருவர் கண்களால் பார்த்துக் கொண்டோம். தம்பியின் முகத்தில் பெரும் விசமம் கொப்பளித்துக் கொண்டிருந்தது.

மாமா போயிலையை இரண்டு கைகளாலும் ஏந்தி ஒரு வீரனைப்போல தயாராக நின்று கொண்டிருந்தார்.

இரண்டு நிமிடத்தில் யாரோ வரும் காலடிச்சத்தம் கேட்க மாமா பரபரப்பாகினார்.

வெறும் மேலுடன், கண்ணாடியும் சாரமும் அணிந்த ஒரு மனிதர் வர தடாலென்று மாமா சரிந்து விழுந்தார்.

மாமாவுக்கு என்ன? நான் திடுக்கிட்டேன்.

மாத்தையா! புத்தாண்டு வாழ்த்துக்கள் மாமாவின் குரல் பாதாளத்தில் இருந்து கரகரப்பாக கேட்டது.

ஓ. கே. நட்ராஜா மாத்தையா கட்டைக் குரலில் கூறினார். அவர் தான் மாமாவின் மேலதிகாரி.

ஏதோ ஒரு வளையில் மாட்டிக் கொண்ட கரடியைப் போல், மிக மெல்லமாக, கஸ்டப்பட்டு எழுந்த மாமா, சளைக்காமல் தனது முதுகை வளைத்து குனிந்து மாத்தையாவிடம் பாணிப் போயிலையை நீட்டினார்.

பாணிப்போயிலையைக் கண்டதும் மாத்தையாவ-ின் விரிந்த முகம் அகலப்பக்கமாக இன்னமும் விரிந்தது.

தம்பியைப் பார்த்தேன். காணக் கூடாததைக் கண்டதைப் போல் அதிர்ச்சியில் நின்று கொண்டிருந்தான். மறுபடி அநுராதபுரம் புகையிரத நிலையத்தில் இருந்து, இரயில் வண்டி புறப்படும் வரை எதைப்பற்றியுமே அவன் மூச்சே திறக்கவில்லை.

இப்போதெல்லாம் மாமாவைப் பார்க்கின்ற போது எனக்கு பாண்டியனின் நினை வருவதேயில்லை. வளைந்து போன ஒரு வாளின் நினைவு மட்டும் மறுபடி மறுபடி வந்து தொலைக்கின்றது.




# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




### In Classes

- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (11 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

18 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

## YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

**905-793-9546 / 416-616-5979**

250 Summerlea Road, Brampton, ON

# MALVERN MONTESSORI SCHOOL

**10 Sewells Road, Scarborough**
**(Sewells / Neilson)**

***SPECIAL SUMMER DISCOVERIES FOR KIDS!***

***"The challenge in planning a program for young children is in finding a new way to motivate children's thinking by concrete experience"***

**APPLY NOW FOR OUR NEW SUMMER SCHOOL 2005!**

- AGES 2 1/2 TO 6 YEARS
- MORNING AND EVENING CLASSES
- LOW STUDENT ^TEACHER RATIO
- MATH AND LANGUAGE (READING AND WRITING)
- HISTORY, GEOGRAPHY AND SCIENCE
- OUTDOOR PLAY ACTIVITIES
- ART AND CRAFT
- BRIGHT SPACIOUS CLASSROOMS
- EXTENDED CARE HOURS ( 7.30am - 6.15pm)

FOR ENROLLMENT PLEASE CALL (416) 724-8900

*"HELP THE CHILD HELP HIMSELF."*

# SHAWN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL







**Fork Lift licence $75.00**

**Truck licence $899.00**

### In Classes

**365 (Learning Permit)**
**Dangerous Goods**
**Border Crossing**
**Air Brake (Z)**
**Log book**

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

**Air brake $175.00**

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

## Pl. Call: Raja / Shan

**416.412.7618/416.829.0603**

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

# NTE AUTO

## New Trade Engineering Inc.



ஸ்காபரோவில் 14வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

## என். ரி. இ. ஓட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.

# எனக்குள் மறைந்திருந்து என்னையே ஏமாற்ற முயற்சிக்கும் எதிர்மறை சக்தி

சில சமயங்களில் தவறான சங்கதி சமாச்சாரங்களை உண்மையென எனை நம்ப வைக்கும் சில சம்பவங்களும் என் வாழ்வில் குறுக்கிடலாம் என்பதை இன்று புரிந்து கொள்கிறோன்.

எமது பலம், பலவீனங்களைத் தருணம் பார்த்து உபயோகித்து வாழ்வின் தார்மீகப் பாதையிலிருந்து எமைத் திசைதிருப்பித் தடுமாற வைக்கக்கூடிய சக்தி ஒன்று நிச்சயம் இருக்கிறது. மிகவும் சாமர்த்தியமான இச் சக்தியை ஏமாற்றும் நுட்ப அறிவு (Deceptive Intelligence) என அழைக்கலாம். உனது பிரார்த்தனைகளை இறைவன் ஒருபோதும் கேட்பதில்லை! உனது கடவுள் நம்பிக்கை ஒரு பயனும் தராது. உனது நம்பிக்கை ஆட்டங் கண்டு விட உனது பலவீனத்தை கொஞ்சம் நீ வெளிக்காட்டினவுடன் இத்தீய சக்தி உன்னை அதல பாதாளத்திற்குத் தள்ளி விழுத்தி விட்டு சூழும் இருளில் நீ தத்தளித்துத் தடுமாறிச் சோர்வடைந்து நிலைகுலையப் பண்ணி விடுவதை சில சமயங்களில் நீ உன்வாழ்வில் உணர்ந்திருக்கலாம்.

## ஆளுமை (54)


## வளர்ச்சிக்குப்

## பிரார்த்தனைகள்

இந்த எதிர்மறை சக்தி எம் ஒவ்வொருவருள்ளும் மறைந்திருக்கின்றது. சொல்லக் கூடாதவற்றை யெல்லாம் உன்னைச் சொல்லப் பண்ணும் இது. திருத்த முடியாத பல தவறுகளை உன்னைச் செய்யத் தூண்டும். தொடர்ந்து இரவிரவாகத் தூக்கமின்றி உன்னைத் தவிக்க விடும். இல்லாத விஷயங்களையெல்லாம் இருப்பதாக உன் கண்முன் காட்டும். காதுகளிற்குக் கேட்கப் பண்ணும். இத்தகைய கேடுகெட்ட சக்தி யொன்று இருக்கிறது என்பதை உணர்ந்து, நீ மிக அவதானமாகச் செயற்பட வேண்டும். இத்தீய சக்தி வெளியில் எங்கோ ஒளிந்திருப்பதாக நீ நினைக்கலாம். ஆனால் உண்மை என்ன தெரியுமா? உனக்கு உள்ளே தான் இத்தீய சக்தி மறைந்திருக்கிறது! உனக்கு இது ஆச்சரியமாய் இருக்கிறதா?

அவர்களுக்குப்பயம்! இதற்குப் பரிகாசம்! அவைபற்றிச் சந்தேகம்! தட்டந்தனியாகத் தத்தளிக்கும் நான் ஒன்றுக்கும் உதவாதன்! ஒரு வித நன்மையும் பெற்றிடத் தகுதியில்லாதவன், என நீ விரக்தியுடன் தவித்தால் என்ன நடக்கும் தெரியுமா? இத்தீய சக்தி உன் இதயவாசல் மூலம் உனது மனதில் மெல்லமெல்ல குடிபுகுந்து உனது கனவுகளைக் கலைத்து விருந்துண்டு, நடமாடிக் கொண்டாட ஆரம்பித்து விடும். இப்பொல்லாத சக்தியின் பிடியிலிருந்து உன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஒரேஒரு வழிதான் இருக்கிறது. உனது நம்பிக்கை ஆம்! எனக்கெதிராகக் கிளப்பும் எந்தச் சக்தியும் வெற்றியடையாது எனும் உனது அசையாத நம்பிக்கைதான் அது! இத் தீய சக்தி உண்மையாக உனக்குள் இருக்கலாம். ஆனால் உனக்குள் குடி கொண்டிருக்கும் எதிரிகளோ வெளியில் வசிக்கும் பகைவர்களோ, யாராயினும் சரி, நீ அநுமதித்தாலன்றி அவர்களால் ஒருபோதும் உனைத் தோல்வியுறச் செய்து வெற்றியடைய முடியாது. குறிக்கோளை அடைய முயற்சிக்கும் உன் வாழ்வெனும் யாத்திரையிலிருந்து வழிதவறி அச்சமும் குழப்பமும் உனை நிலை குலையப் பண்ணலாம். சத்தியத்தைப் பொய்யாக்கி உன்னைத் தடுமாறப் பண்ணும் உனது இந்த எதிர்மறை அந்தரங்கக் குரலை முதலில் அடையாளங்கண்டு கொள். இன்றுமுதல் அதனை நம்பாதே!

இன்றுவரை இக்கொடிய சக்தி, உன்னையே தனது வேலையாளாக்கி, உன்னைப் பயப் படுத்திக் குழப்பி வழிதவறப் பண்ணியிருக்கலாம். உண்மையற்ற வதந்திகளை நம்பத் தூண்டி உன் வீழ்ச்சிக்காக உன்னையே உபயோகித்திடும் இத் தீய சக்தியை எதிர்த்துப் போராட இன்று முதல் தீர்மானித்துக் கொள்.



ஆம்! இறைவன் அருள் எனை வழிநடத்தும் போது, என் முன்னேற்றத்தினை எதிர்த்து அழிக்க முனையும் எத் தீய சக்தியும் ஒரு போதும் வெற்றியடையாது என்பதை பக்திபரவசமான நன்றியுடன் நினைவு கூர்ந்து ஆண்டவனை வணங்குகின்றேன்.


மேலதிக தகவல்களிற்கு
அழையுங்கள் 905-624-9617



லலிதா புரூடி



## தமிழர் நிர்வாகத்தில் ஒரு

# EMBASSY

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது

ஆனால்



- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

சமோசாவிற்கு அழையுங்கள்
416-332-0944

4 1 6 - 3 3 2 - 8 4 5 1

Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough



visit us online at www.divinehome.com



25%-45% OFF

ஒவ்வோரு வீட்டிற்கும் ஏற்ற சுவாமிப்படத்தட்டுகள்

Scarboroughவில் Eglinton & Bellamy சந்திப்பில்

# DIVINE HOMES

## Peace & Prosperity

தெய்வ இல்லம் அமைதிக்கும், சேழுமைக்கும்

100ற்றும் அதிகமான தெரிவுகள்

**2-2956 Eglinton Avenue East, Scarborough**
**Call: 416-289-1043, 416-999-3997**

## புதிய கிளை Brampton மாநகரில்

**HWY 10/Sandalwood**
**114 Masters Cr., Brampton**
**Tel: 905-495-4208**

கைகளால் செதுக்கப்பட்ட பூஜைமேடைகள்
அன்பளிப்புப் பொருட்கள்,
சுவாமிப்படத்தட்டுகள், படங்கள்
சுவாமி சிலைகள்,
பூஜையறை அலங்காரப் பொருட்கள்

**Special Design & Custom Orders Available... Call for more info...**







**Buy Direct From Manufacturer: Prices Slashed**

# தமிழ்மொழி கற்போம் தரணியில் நிற்போம்

தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை, தூய்மை, அன்பு என பல பொருள் கொள்ளலாம். எமது மொழி இனிமையும் தூய்மை, கனிவும் உடையது. மேலும் அது தேனினும் இனியது. தெவிட்டாதசுவை உடையது. இலக்கணம் சிறந்தது. இலக்கியவளம் செறிந்தது. ஒப்புயர் வற்றது. ஒண்கலை சிறந்த தன்னி கரில்லாதது. தனிப்புகழ்வாய்ந்தது. மண்ணில் சிறந்தது. மண்ணில் பழையது. இது செம்மொழி. இப்பொழுது செவ்வாய் மொழி எனவும் அழைக்கப்படுகின்றது. செவ்வாய் கிரகத்தில் உள்ள பாறைக்கு 'பொங்கல்' எனப் பெயரிடப்பட்டுள்ள யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம். உண்மை வெறும் புகழ்ச்சியில்லை என பாடினான் பாரதி தமிழுக்கு அமிழ்து என்று பெயர். அத்தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று அதன் சிறப்பை, பெருமையை உயர்வை அறுதியிட்டுக் கூறினான் பாரதிதாசன்.

மேலும் 'தமி' என்பதற்கு ஒப்புயர்வில்லாதது என்பது பொருள். தமியன் என்பது இறைவனைக் குறிக்கும் என இறையிலக்கணம் தமிழுக்கும் பொருந்தும். ஆதலினால் ஆதியும் அந்தமு மில்லாதது, அன்பே உருவானது, அருள் வடிவானது, அது இன்பத் தமிழ். தெய்வத் தமிழ் கந்தன் அருளிய தமிழ் பொருளிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்திருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பாவை என்று அதன் தோற்றமும் வளர்ச்சியும் குறிப்பிடப்படுகின்றன.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த குடி என்பது தமிழர் தொன்மையையும் அவர் மொழியின் பழமையையும் உணர்த்தி நிற்கின்றன. தேவபாண்டியான வடமொழியும், திராவிடர் மொழியான தமிழும், இவற்றின் பழைமையை நோக்கியே இறைவனால் அருளப்பட்டவை எனப்படுகின்றன.

வடமொழியைப் பாணினிக்கு  
வருந்தருளி அதற்கிணையாத்  
தொடர்புடைய தென்மொழியை  
உலகெல்லாம் தொழுதேத்தும்  
குடமுனிக்கு வலியுறுத்தார்  
கொல்லேற்றுப் பாகன் - என்பது காஞ்சிபுராண தமிழ் மொழியின் பழமையை உணர்த்தும் வகையில் என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினன் எங்கள் தாய் என்று பாரதியாரும் "பற்பல ஆண்டுகள் இந்தப் பாரினில் இருந்தறம் பூண்டவரும் என்று நாமக்கல் கவிஞரும்" "முதுமொழி நீ அனாதியென மொழிவதும் வியப்பாமோ என்று சுந்தரம்பிள்ளையும் கூறியிருப்பது தமிழ்மொழியின் தொன்மையைத் தெரிவிக்கின்றன. எனவே தமிழ்மொழி ஒரு முதுமொழி எனபது உறுதி செய்யப்பட்டுள்ளது. அது ஒரு முதுமொழியாயினும் அது தனது சீரிளமைத் திறம்மாறாது இன்றும் விளங்குவது அதன் தனிச்சிறப்பாகும். அது கன்னித் தமிழ் என்று முன்னின்தமிழ். தமிழ்மொழி வழங்கிய நிலப்பரப்பு வடவேங்கடல் முதல் தென் குமரிவரை எனலாம். குமரிநாடே பண்டைத் தமிழ்நாடு. தமிழ் தோன்றி வளர்ந்தநாடு தலைச்சங்கமிகுந்த நாடு. இதற்கு எல்லாம் என்பது வேறொரு பெயராகும்.

தென் குமரிவடபெருங்கடல்  
குண குட கடலா எல்லை - என்பது தமிழ் வழங்கிய நாட்டின் எல்லைகளை வரைய-றை செய்யும்.

தென்மொழிகள் எல்லாவற்றிற்கும் முதல் மொழியாகவும் மூலாதாரமாகவும் விளங்குவது தமிழ்மொழி இயற்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என முப் பிரிவுகளை உடையதால் தமிழை முத்தமிழ் என்பர். இயற்தமிழ் - வசனநடை இசைத்தமிழ் பாடல்கள் நாடகத்தமிழ் கூத்துவகைகளாகும். தமிழ்மொழி சங்கத்தமிழ் எனப்படுகின்றது. சங்கம் வைத்து மொழி வளர்த்தனர். தமிழர்கள்- முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்று மூன்று சங்கங்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. இச்சங்கங்களில் பெண்பால் புலவர்களும் இருந்தமை குறிப்பிடப்படவேண்டியதாகும். தொல்காப்பியம் முத்தமிழ் இலக்கணமாகும். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே இயல், இசை, நாடகத்துறை நன்கு வளர்ச்சி யடைந்திருந்தமையை அது குறிப்பிடுகின்றது.

ஒவ்வொருமொழிக்கும் தனிச் சிறப்பு உண்டு. இந்தவகையில் தமிழ் பக்திமொழி எனப்படுகின்றது. நாயன்மாரும் நம்மாழ்வரும் தமிழ் இசையையும் இறைவனையும் ஒன்றுபடுத்தி அன்புருகினர். பண்ணார்ந்த பாட்டிசைத்தனர். ஞானசம்பந்தர் தன்னை நற்றமிழ் ஞானசம்பந்தன் என்றார். தமிழோடு இசைபாடல் மறந்தறியேன் என்றார். நாவரசர் "பண்ணிசைத்தமிழ் ஒப்பாய்' என்றார் சுந்தரர் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு என்னை நன்றாக இறைவன் படைத்தனர் என்றார். திருமூலர் ஞானச் சுடர் விளக்கேற்றினேன். நாரணற்கு ஞானத் தமிழ் புரிந்த நான்" என்றார்.

**நா.க. சிவராமலிங்கம்**

பூதத்தாழ்வார் இறைவனைத் தூது அனுப்பியதும் முதலை உண்ட பாலனை வரவழைத்ததும் எலும்பை பெண்ணுருவாகக் கண்டதும் மறைந்த காட்டில் கதவினைத் திறந்ததும் நீற்றறையைத் தண்மதிக் குளிர்ச்சியுடையதாக்கியதும் தூய தமிழ் சொல் அல்லவா தமிழின் ஆற்றல் வல்லமை, அருட்திறன் இதனால் உணர்த்தப் படுகின்றதன்றோ. எனவே தமிழ் எங்கள் தாய்க்கு நிகரானது. தாய்க்கு நிகராக எவரையும் கூறமுடியதல்லவா. மாற்றாந்தாய், செவிலித்தாய், வளர்ப்புத்தாய் ஒருபடி குறைந்தவர்கள் தானே!

நெல்லையூர் சென்று அவ்வூணர் கலைத்திறன் நேருமாறு எந்தை பணித்தனன் என்று ஆங்கிலமொழி கற்பதற்கு தந்தை அனுப் பியதையிட்டு விசனப்படுகின்றார் பாரதியார். பிறமொழி கற்பது கூடாது என்பதல்ல. பலமொழிகள் அறிந்திருந்த அறிவை ஆழமாக்கவும், அகலமாக்கும் என்பது உண்மை. ஆனால் முதல்மொழிக்கு முன்னுரிமை தரவேண்டும். ஏனெனில் பிறமொழியில் கற்பது கண்கட்டி சித்திரம் பார்ப்பது போலாகும். சிந்திக்கவும், சிந்தனையை நன்கு வெளிப்படுத்தவும், பயிர்ச்சியும், தேர்ச்சியும் பாண்டித்துவம் பெறவும் தாய்மொழியே சிறந்தது. புலம்பெயர் நாட்டிலே கல்விமொழி ஆங்கிலமாக இருந்தாலும் வீட்டுமொழி தமிழாகவே இருக்கவேண்டும். தாய்மாருக்கும் பாட்டி மாருக்கும் இதில் கணிசமான பங்கு உள்ளது. உணவூட்டும் போதும் தாலாட்டும் போதும் தமிழை கற்பிக்கலாம். தமிழ்மொழி கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்காததற்கு மகன் தந்தை மீதுவழக்கு தொடர்ந்து இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. தாய்மொழி கற்பதற்கு பிள்ளைக்கு உரிமை உள்ளது. அதற்குரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பது பெற்றோரது முந்திய முதற் கடமையாகும். மொழி அபிமானம் அவசியமானது. அது வெறியாக மாறிவிடக்கூடாது.

தமிழ் ஒரு வளமார்ந்த மொழி, செம்மொழி உலகளாவிய மொழி, உயர்மொழி இறை உணர்வை வெளிப்படுத்தும் மொழி என்பதனால் இந்த மொழிக்கு உரித்துடையவர்களாக இருப்பதையிட்டு நாம் பெருமை கொள்ள வேண்டும். இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர் விழுந்தமிழ் எனினும் வேண்டேன் என்று பெருமிதம் கொள்ள வேண்டும். எனவே பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை தமிழ் மொழியில் பெயருங்கள். அதனை ஒரு அறிவியல் மொழியாக பாமரரும் பயன் பெறுவதற்கு பழகு தமிழில் எழுதுங்கள் என்று அறிஞர் பெருமக்களை அறைகூவி அழைப்போம். அதேவேளை தமிழ்மொழியை கற்போம். அதில் சாதனை புரிவோம் என்று சாதாரணமக்கள் சங்கற்பம் பூணவேண்டும். போலி கௌரவதிற்கு ஆட்பட்டு சுயத்தை இழந்து விடக்கூடாது. மொழி, கலை, பண்பாடு என்பன ஒரு இனத்தின் அடையாளங்களாகும். நாம் எங்கிருந்தாலும் எந்நிலையிலிருந்தாலும் இதனை மறந்து விடக்கூடாது. நாம் தமிழ்ரென்று வாழாமல் நமதுமொழி தமிழ் எனக்கொண்டு நமது செயற்பாடுகளால் தமிழரின் தனித்துவத்தைப் பேணுவோம். தமிழே எமது மூச்சாக இருக்க வேண்டும். வெண்ணிலாவும் வானும் போலவும், வீரனும் கூர்வாளும் போலவும் வண்ணப்பூவும் மணமும் போலவும் மகரயாழும் இசையும் போலவும் கண்ணும் ஒளியும் போலவும் கன்னல் தமிழும் நாமும் கலந்திருக்கும் நித்திய நிலையை வேண்டிநிற்போம். ஐம்பெரும் கந்தபுராணத்தை காப்பியங்களையும், கம்பனையையும் வள்ளுவனையும் கந்தபுராணத்தையும் பெரிய புராணத்தையும் கற்பதற்கு தமிழறிவு வேண்டும்.

தவந்தரும் மேலாம் தனம்தரும் இன்பந்தரும் தணிய  
நலந் தரும் சீர்தரும் நட்புத்தரும் நல்வாழ்வு தரும்  
பலந் தரும் தீவினை வேரும் மரமும் பறித்து அழியாச்  
சிவந்தரும் செந்தமிழ்ச் செவ்வியின் ஞானத் திருவடி  
இது நவாலியூர் சோமசுந்தரப்புலவர் கூற்று.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்  
மங்கா தமிழென்று சங்கே முழங்கு.

# பெற்றோரை நோக்கி ஒரு பிள்ளையின் பத்து வேண்டுகோள்

1. எனது கைகள் சின்னஞ்சிறியவை. எனவே நான் எனது அறையை துப்பரவு செய்யும் போது அல்லது நான் உணவு உண்ட பாத்திரத்தைக் கழுவும் போது அல்லது ஒரு படத்தைக் கீறும் போதும் தயவு செய்து என்னிடத்தில் பூரணத்துவத்தை எதிர்பார்க்காதீர்கள்.

2. எனது கண்கள் உங்களைப் போல் இன்னும் இந்த உலகைப் பூரணமாகப் பார்க்கவில்லை. எனவே தயவு செய்து என்னையும் பாதுகாப்பாக இவ்வுலகை அறிய விடுங்கள். காரணமின்றி குறைகூறாதீர்கள்.

3. எனக்கு நீங்கள் ஒழுக்க விதிகளைப் போடும்போது தயவு செய்து நான் ஒரு சிறுபிள்ளை என்பதையும் அவற்றை நான் விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள். உங்கள் நேரத்தை எனக்காக ஒதுக்கி அவற்றை எனக்கு விளங்க வையுங்கள்.

4. எனது உணர்வுகள் மென்மையானவை என்பது உங்களுக்குத் தெரியும். தயவு செய்து எனது வேண்டுகோள்களையும் மென்னையாக அணுகுங்கள். உங்களிடம் மற்றவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கின்றீர்களோ தயவுசெய்து அதுபோலவே என்னிடமும் நீங்கள் நடந்து கொள்வீர்களா?

5. நான் கடவுளால் உங்களுக்காக அளிக்கப்பட்ட சிறப்புப் பரிசு. கடவுள் விரும்பியது போல என்னை அன்புடன் அரவணையுங்கள். அன்பான வழியிலே ஒழுக்கத்தைக் கற்றுத் தாருங்கள். நல்வாழ்வின் வழிமுறைகளை கற்றுத்தாருங்கள். எனது செயல்களுக்கு நானே பொறுப்பாளி என்பதை எனக்கு உணர்த்துங்கள்.

6. எனது வளர்ச்சிக்கு உங்கள் உற்சாகத்தையும் பாராட்டுக்களையும் என்றும் வேண்டுகின்றேன். தயவு செய்து தவறுகளை மென்மையாகச் சுட்டிக்காட்டி என் பிஞ்சு மனது ஒடிந்து போகாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள்.

7. தயவு செய்து எனது விடயங்களில் நானே முடிவெடுக்கும் சுதந்திரத்தைத் தாருங்கள் என்று தாழ்மையுடன் உங்களை வேண்டுகின்றேன். என்னைத் தோல்வியையும் சந்திக்க அனுமதியுங்கள். அப்போதுதான் எனது தவறுகளையும் நான் உணர்ந்து கொண்டு என்னைத் திருத்திக்கொள்ள முடியும். இவ்வாறுதான் பின்னர் ஒரு நாள் வாழ்வின் முக்கிய முடிவுகளையும் என்னால் எடுக்க முடியும்.

8. தயவு செய்து எனது வேலைகளை நீங்களே செய்யாதீர்கள். அப்படி நீங்கள் செய்வதனால் எனது வேலையில் உங்களுக்குத் திருப்தியில்லை என என்னுள் எண்ணத் தோன்றுகின்றது. உங்கள் திருப்திக்கு வேலை செய்வது என்பது சிறுவனான எனக்கு கடினம்தான். ஆனால் அதற்காக தயவு செய்து என்னை என் சகோதரன் அல்லது சகோதரியுடன் ஒப்பிடாதீர்கள். என் பிஞ்சு இதயம் உடைந்து போய்விடும்.

9. தயவு செய்து என்னையும் எப்போதும் கண்ணியத்துடன் நடத்துங்கள். அவ்வாறு நீங்கள் செய்யும் போதுதான் என்னையே நான் மதிக்கும் நிலை வரும்.


10. ஒருநாள் நானும் ஒரு மனிதனாக வளர்ந்து என்னைப்பற்றி நானும் என் சமூகமும் பெருமையடைவதை நீங்கள் பார்த்துக் பெருமையடைவீர்கள்.

வெயிலின் அருமை.....



நிழலில்... தெரியும்...

வெயிலின் அகோரத்தை பிறந்ததில் இருந்து அனுபவித்த எங்களுக்கு ஏன் இந்த வெயில், அனல் போல் தெரிகிறது...? ரி.வி.யில் ஓடும் படத்தில் வரும் ஏ.ஆர். ரகுமானின் இசையை விட ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட் புளோர் செல்லம்மாவும், ராசம்மாவும் தங்கள் வாயாலையே... ஆ... ஊ... என தங்கள் வாயாலையே ஊதி வெக்கையை குறைக்க நினைத்தனர்....




ரூபி வெக்கை தாங்க முடியாமல்... இன்றைய சினிமா நடிகைகள் போல சிறிய உடையுடன் நீச்சலுக்கு போக ஆயத்தமானா... உலகர் அதே நாலுமுழத்துடன் அமைதியாக இருந்தார்...



முந்திய காலம்... தமிழ் மக்கள் குறைவு... வாரம் விடுமுறைகள்... பிறந்தநாள், அல்லது ஒரு நண்பர் வீட்டில் சாப்பாடு... நாளும் பொழுதும் சந்தோஷமாகவே கழிந்தன...

காலத்தின் ஓட்டம்...

இப்போ அரச பூங்காக்களில் ஒன்றுகூடல்... நண்பர்களோ... உறவுகளோ... ஊரவரோ... அப்படி அங்கே சந்தித்தால் தான் உண்டு... ஜூன் முதல் செப்ரெம்பர் வரை இதே கூத்துதான். பழையபடி குளிர், பர்ன... காலங்கள் மாறுகிறது... நாங்களும் மாறுகிறோம்



ஆண்டொன்று போனால்... வயதொன்று போகும்

உலகப்பு... உலகப்பு... நான் கிறாட்யுவேற் (graduate) பண்ணிப்போட்டன் என்று துள்ளிக்கொண்டு வந்தான் பிறிம்லி மீனாவின் மகன் மதன்... உலகருக்கு தான் திக்குமுக்காடி படித்த காலங்கள் நினைவில் வலம் வந்தன..... ஆசிரியர்களிடம் வாங்கிய பாராட்டுக்கள், ஆசிகளைவிட... பேச்சுக்களும், ஏச்சுக்களும் தான் கூட...

இங்கே... இரண்டாம் வகுப்பிலிருந்தே...... கிறாட்சுவேசன்...

அடேயப்பா... என்ன இருந்தாலும்... கஸ்டப்பட்டு பிள்ளைகளை படிக்க வைத்த பெற்றோர் விடும் இதமான பெருமூச்சு இதமாக கேட்கிறது.

அரியாசனத்தில் அரசரோடென்னை சரியாசனம் வைத்த தாய்......



மதன் கையில் 4, 5, கனடிய கொடிகளை வைத்திருந்தான்... உலகப்பு... கனடாவின் வயது என்ன சொல்லுங்கோ பாப்பம் என்றான்... ஐந்தும் மூன்றும் எத்தனை என கந்தசாமி வாத்தியார் கேட்ட பொழுது எப்படி திரு திருவென முழித்தாரோ... அப்படியே முழித்தார்... கனடாவுக்கு வயசு உலகன்னையின்ரை வயசைப் போல இரண்டு வயதிருக்கும் என்று சொல்லி சிரித்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா... சிரித்தபொழுது ராசம்மாவின் முகம் சந்திரமுகி ஜோதிகாவின் முகம் போல... இல்லை... இல்லை..... அன்னியன் விக்ரமின் முகம் போல பல கோணங்களில் மாறியதை உலகர் கவனிக்கத் தவறவில்லை...



